தினபூமி
thinaboomi.com
பூமி: 30 சுற்று: 227 ஆடி 08
Regd. No.CBE/090/2011-2013
கோவை, வியாழன், ஜூலை 24, 2025
சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**போரை முடிவுக்கு கொண்டுவர ரஷ்யா அதிபர் புதினுடன் பேச தயார்: ஜெலன்ஸ்கி**

...2-ம் பக்கம்

**பீகார் மாநிலத்தில் 52 லட்சம் வாக்காளர்கள் அதிரடி நீக்கம்: தேர்தல் கமிஷன் நடவடிக்கை**

...3-ம் பக்கம்

**இங்கிலாந்தில் 1000 ரன்களை கடந்த இந்திய வீரர்கள் பட்டியலில் கே.எல்.ராகுல்**

...6-ம் பக்கம்





● சென்னை அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று மருத்துவமனையிலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக "உங்களுடன் ஸ்டாலின்" திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து கன்னியாகுமரி, காஞ்சிபுரம், கோயம்புத்தூர் ஆகிய மாவட்ட ஆட்சித்தலைவர்களுடன் ஆய்வு மேற்கொண்டபோது, "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களில் கலந்து கொண்ட பயனாளிகளிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்து கலைந்துரையாடினார். உடன் தலைமைச்செயலாளர் நா.முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### மருத்துவமனையில் இருந்து உங்களுடன் ஸ்டாலின் திட்டம் குறித்து

# 3 மாவட்ட கலெக்டர்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆய்வு

## பொதுமக்களின் மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தல்

சென்னை, ஜூலை 24-

**மருத்துவமனையில் இருந்தபடியே நேற்று "உங்களுடன் ஸ்டாலின்" திட்டப் பணிகள் குறித்து கன்னியாகுமரி, காஞ்சிபுரம், கோவை மாவட்ட ஆட்சியர்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக ஆய்வு மேற்கொண்டார். மேலும், உங்களுடன் ஸ்டாலின் திட்ட பயனாளிகளிடம் இருந்து பெறப்படும் மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று அப்பொழுது அவர்களை அறிவுறுத்தினார்.**

**திடீர் உடல்நலக்குறைவு...**

முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 3 நாட்களுக்கு முன் காலையில் வழக்கமான நடைபயிற்சி மேற்கொண்டபோது அவருக்கு லேசான தலைச்சுற்றல் ஏற்பட்டது. இதனால், அவர் சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு மருத்துவர்கள் கண்காணிப்பில் முதல்வருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

> **"மருத்துவமனையில் இருந்தபடியே உங்களுடன் ஸ்டாலின் முகாம்கள் குறித்து மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் பொதுமக்களிடம் கேட்டறிந்ததோடு அரசு கோப்புகளிலும் கையெழுத்திட்டேன். மருத்துவர்கள் அறிவுறுத்திய ஓய்வுக்கு பிறகு, விரைவில் உங்களை சந்திக்க உங்கள் மாவட்டங்களுக்கு வருவேன்."**
>
> **- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

**அரசு பணிகள் குறித்து**

3 நாட்கள் மருத்துவமனையில் தங்கி ஓய்வெடுக்க வேண்டும் என்று மருத்துவர்கள் அறிவுறுத்திய நிலையில், முதல்வர் அங்கு தங்கியுள்ளார். இதற்கிடையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆஸ்பத்திரியில் இருந்தபடியே அரசுப் பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டார். கடந்த 15-ம் தேதியன்று தமிழ்நாட்டில் தொடங்கப்பட்டு சிறப்பாக நடைபெற்று வரும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் பணிகளின் முன்னேற்றம் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார்.

**2-வது நாளாக....**

இந்த நிலையில், 2-வது நாளாக நேற்றும் மருத்துவமனையில் இருந்தபடியே காணொலி காட்சி வாயிலாக பொதுமக்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துரையாடினார். ஸ்ரீபெரும்புத்தூரில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்களில் கலந்து கொண்ட மக்களிடம் குறைகளை கேட்டும், அவர்களுக்கு தீர்வு கிடைத்தது குறித்தும் முதல்வர் கேட்டறிந்தார். அப்போது பயனாளிகள் முதல்வருக்கு நன்றி தெரிவித்தனர்.

**பணிகளின் முன்னேற்றம்...**

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறி இருப்பதாவது:- முதல்வர் மு.க.ஸ்டாலின் சென்னை அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, அங்கிருந்தபடியே அலுவலகப் பணிகளை மேற்கொண்டு வருகிறார். உங்களுடன் ஸ்டாலின்"

(கடைசி பக்கம் பார்க்க)

# மருத்துவமனையில் இருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் எப்போது டிஸ்சார்ஜ்?

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் பதில்

சென்னை, ஜூலை 24-

**மருத்துவமனையில் இருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் எப்போது டிஸ்சார்ஜ் செய்யப்படுவார் என்பது குறித்து அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 3 நாட்களுக்கு முன் காலையில் வழக்கமான நடைபயிற்சி மேற்கொண்ட போது அவருக்கு லேசான தலைச்சுற்றல் ஏற்பட்டது. இதனால், அவர் அன்று சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ ஆஸ்பத்திரிக்கு உடல் பரிசோதனை மேற்கொள்ள சென்றார். அங்கு அவரை பரிசோதனை செய்த டாக்டர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலின் 3 நாட்கள் ஆஸ்பத்திரியில் தங்கி ஓய்வெடுக்க வேண்டும் என்றும், அவருக்கு மேலும் பல பரிசோதனைகள் செய்ய வேண்டி இருப்பதாகவும் தெரிவித்தனர். இதையடுத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் காலை முதல்வர் மு.க.ஸ்டாலின் கிரீம்ஸ் சாலை அப்பல்லோ ஆஸ்பத்திரியில் இருந்து தேனாம்பேட்டையில் உள்ள அப்பல்லோ ஆஸ்பத்திரிக்கு அழைத்துச்செல்லப்பட்டார். அங்கு அவருக்கு சுமார் 2 மணி நேரம் மருத்துவ பரிசோதனைகள் மேற்கொண்ட பிறகு மீண்டும் கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ ஆஸ்பத்திரிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைத்து வரப்பட்டார். தொடர்ந்து மருத்துவர்கள் கண்காணிப்பில் முதல்வருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் உடல் நிலை குறித்து மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:- சகோதரர் மு.க.முத்து மறைவால் ஒருநாள் முழுவதும் முதல்வர் மு.க.ஸ்டாலின் சாப்பிடாமல் இருந்துள்ளார். அதற்கு மறுநாள் சுமார் ஒன்றரை கிலோ மீட்டர் வரை நடைபயணம் மேற்கொண்டபோது முதல்வருக்கு தலைசுற்றல் ஏற்பட்டுள்ளது. பயப்படும் அளவுக்கு ஒன்றும் இல்லை; அவருக்கு பல பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்போது முதல்வர் மு.க.ஸ்டாலின் நல்ல உடல் நலத்துடன் உள்ளார். அப்பலோ ஆஸ்பத்திரியில் இருந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் எப்போது டிஸ்சார்ஜ் எனும் தகவல் மருத்துவமனை நிர்வாகம் சார்பில் வெளியிடப்படும். இவ்வாறு அவர் கூறினார்.

### ஆபரேஷன் சிந்தூர் குறித்து விவாதிக்கக்கோரி

# பார்லி.யில் எதிர்க்கட்சிகள் 3-வது நாளாக தொடர் அமளி

## இரு அவைகளும் அடுத்தடுத்து ஒத்திவைப்பு

புதுடெல்லி, ஜூலை 24-

**எதிர்க்கட்சி உறுப்பினர்களின் தொடர் அமளி காரணமாக பாராளுமன்றத்தின் இரு அவைகளும் 3-வது நாளாக நேற்றும் அடுத்தடுத்து ஒத்திவைக்கப்பட்டன.**

பாராளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் கடந்த 21-ம் தேதி தொடங்கியது. ஆபரேஷன் சிந்தூர், பிஹார் வாக்காளர் பட்டியல் திருத்தம் உள்ளிட்ட பிரச்சினைகளை கூட்டத் தொடர் தொடங்கியது முதல் எதிர்க்கட்சிகள் எழுப்பி வருகின்றன. அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விட்டு இவற்றை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சிகள் இரு அவைகளிலும் வலியுறுத்தி வருகின்றன.

எனினும், மக்களவையில் சபாநாயகரும், மாநிலங்களவையில் அதன் தலைவரும் இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. கேள்வி நேரம் உட்பட அவையின் பிற அலுவல்கள் திட்டமிட்டபடி நடக்கும் என்றும், அதேநேரத்தில், எதிர்க்கட்சிகள் எழுப்பும் பிரச்சினைகளும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அவர்கள் கூறி வருகின்றனர்.

இதனால், முதல் நாள் முதலே இரு அவைகளும் அடுத்தடுத்து ஒத்திவைக்கப்பட்டன. நேற்று காலை 11 மணிக்கு இரு அவைகளும் கூடியபோதும், எதிர்க்கட்சிகள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தினர். மக்களவையில் சபாநாயகரின் இருக்கையை சூழ்ந்து கொண்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பதாகைகளை ஏந்தியவாறு தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர்.

எதிர்க்கட்சி எம்பிக்களின் அமளிக்கு மத்தியில், சபாநாயகர் ஓம் பிர்லா கேள்வி நேரத்தை தொடங்கினார். பிஹார் மாநில எம்பிக்கள், தங்கள் மாநிலத்துக்கான ரயில்வே திட்டங்கள் தொடர்பாக கேள்விகளை எழுப்பினர். அதற்கு ரயில்வே அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ் பதில் அளித்தார். எனினும், எதிர்க்கட்சி எம்பிக்களின் அமளி தொடர்ந்து நீடித்ததால், அவையை 12 மணி வரை ஒத்திவைப்பதாக சபாநாயகர் ஓம் பிர்லா அறிவித்தார்.

இதேபோல், மாநிலங்களவை அதன் துணைத் தலைவர் ஹரிவன்ஷ் தலைமையில் நேற்று காலை 11 மணிக்குக் கூடியது. அங்குள் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். அமளிக்கு மத்தியில் கேள்வி நேரத்தைத் தொடங்கிய ஹரிவன்ஷ், உறுப்பினர்களை கேள்விகளை முன்வைக்க எழுப்பினார்.

இலங்கை கடற்படையினரால் இந்திய மீனர்கள் கைது செய்யப்படுவது குறித்தும் அவர்களின் படகுகள் பறிமுதல் செய்வது குறித்தும் கேள்வி எழுப்பிய ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, இவ்விஷயத்தில் மத்திய அரசு இலங்கை அரசுக்கு உரிய அழுத்தம் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தினார். மேலும், கச்சத் தீவு ஒப்பந்தத்தை மத்திய அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அதனை ரத்து செய்ய வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார். எதிர்க்கட்சி உறுப்பினர்களின் அமளி தொடர்ந்ததால், அவையை 12 மணி வரை ஒத்திவைப்பதாக ஹரிவன்ஷ் அறிவித்தார். இதனால், மழைக்காலக் கூட்டத் தொடரின் 3-ம் நாளான நேற்றும் இரு அவைகளும் தொடங்கியவுடன் முடங்கின.

### எதிர்க்கட்சிகள் தொடர் அமளி எதிரொலி:

# பாராளுமன்றத்தில் வரும் 29-ம் தேதி ஆபரேஷன் சிந்தூர் குறித்து விவாதம்

## பிரதமர் மோடி, அமித்ஷா விளக்கமளிக்கின்றனர்

புதுடெல்லி, ஜூலை 24-

**பாராளுமன்றத்தின் மக்களவை மற்றும் மாநிலங்களவையில் வரும் ஜூலை 29 அன்று ஆபரேஷன் சிந்தூர் விவகாரம் குறித்து விவாதம் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

பாராளுமன்ற மழைக் கால கூட்டத்தொடரில் ஜூலை 29 அன்று ஆபரேஷன் சிந்தூர் குறித்த விவாதம் நடைபெறும் என்றும், மக்களவையில் 16 மணிநேரமும், மாநிலங்களவையில் 9 மணி நேரமும் விவாதத்துக்காக ஒதுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. நேற்று நடைபெற்ற அலுவல் ஆலோசனைக் குழு (பிஏசி) கூட்டத்திற்குப் பிறகு இது குறித்த முடிவு இறுதி செய்யப்பட்டது.

இந்த விவாதத்தின் போது எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங் ஆகியோர் பதிலளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது. பஹல்காம் பயங்கரவாதிகள் தாக்குதல் மற்றும் ஆபரேஷன் சிந்தூர் குறித்து விரிவான விவாதம் நடத்த எதிர்க்கட்சிகள் கோரிக்கை வைத்து வருகின்றன, இதனால் பாராளுமன்றத்தின் இரு அவைகளும் தொடர்ந்து முடக்கப்பட்டு வருகின்றன.



பாராளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் கடந்த 21-ம் தேதி தொடங்கியது. ஆபரேஷன் சிந்தூர், பிஹார் வாக்காளர் பட்டியல் திருத்தம் உள்ளிட்ட பிரச்சினைகளை கூட்டத் தொடர் தொடங்கியது முதல் எதிர்க்கட்சிகள் எழுப்பி வருகின்றன. அவையின் பிற அலுவல்களை ஒத்திவைத்து விட்டு இவற்றை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என எதிர்க்கட்சிகள் இரு அவைகளிலும் வலியுறுத்தி வருகின்றன.

எனினும், மக்களவையில் சபாநாயகரும், மாநிலங்களவையில் அதன் தலைவரும் இதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. கேள்வி நேரம் உட்பட அவையின் பிற அலுவல்கள் திட்டமிட்டபடி நடக்கும் என்றும், அதேநேரத்தில், எதிர்க்கட்சிகள் எழுப்பும் பிரச்சினைகளும் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும் என்றும் அவர்கள் கூறி வருகின்றனர். இதனால், நேற்று முன்தினமும், நேற்றும் இரு அவைகளும் அடுத்தடுத்து ஒத்திவைக்கப்பட்டன. நேற்று (ஜூலை 23) காலை 11 மணிக்கு இரு அவைகளும் கூடியபோதும், எதிர்க்கட்சிகள் தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தினர். மக்களவையில் சபாநாயகரின் இருக்கையை சூழ்ந்து கொண்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள், பதாகைகளை ஏந்தியவாறு தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி கோஷங்களை எழுப்பினர். எதிர்க்கட்சி எம்பிக்களின் அமளி தொடர்ந்து நீடித்ததால், அவையை 12 மணி வரை ஒத்திவைப்பதாக சபாநாயகர் ஓம் பிர்லா அறிவித்தார்.

இதேபோல், மாநிலங்களவை அதன் துணைத் தலைவர் ஹரிவன்ஷ் தலைமையில் இன்று காலை 11 மணிக்குக் கூடியது. அங்குள்ள எதிர்க்கட்சி உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டனர். எதிர்க்கட்சி உறுப்பினர்களின் அமளி தொடர்ந்ததால், அவையை நேற்று முழுவதும் ஒத்திவைப்பதாக ஹரிவன்ஷ் அறிவித்தார். இதனால், மழைக்காலக் கூட்டத் தொடரின் 3-ம் நாளான நேற்றும் இரு அவைகளும் முழுமையாக முடங்கின.

# சவரன் ரூ.75,000-ஐ தாண்டி தங்கம் விலை புதிய உச்சம்

## கடந்த 5 நாட்களில் ரூ.2,160 உயர்வு

சென்னை, ஜூலை 24-


**சென்னையில் நேற்று (புதன்கிழமை) 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை ஒரு பவுன் ரூ.75,000-ஐ தாண்டி புதிய உச்சத்தைத் தொட்டுள்ளது. கடந்த 5 நாட்களில் தங்கம் விலை பவுனுக்கு ரூ.2,160 அதிகரித்துள்ளது.**

சர்வதேச பொருளாதார சூழல், அமெரிக்க டாலருக்கு நிகரான இந்திய ரூபாயின் மதிப்பு உள்ளிட்டவை தங்கத்தின் விலையை நிர்ணயிப்பதில் முக்கியக் காரணிகளாக உள்ளன. அதனடிப்படையில், ஆபரணத் தங்கத்தின் விலை கடந்த சில நாட்களாகவே கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.

இந்த நிலையில், நேற்று (ஜூலை 23) 22 ஆபரணத் காரட் தங்கத்தின் விலை கிராமுக்கு ரூ.95 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.9,380-க்கும், பவுனுக்கு ரூ.760 உயர்ந்து, ஒரு பவுன் ரூ.75,040-க்கும் விற்பனையானது. கடந்த ஐந்து நாட்களாக 22 காரட் ஆபரணத் தங்கத்தின் விலை தொடர்ச்சியாக உயர்ந்துள்ளது.

கடந்த ஐந்து நாட்களில் தங்கம் விலை பவுனுக்கு ரூ.2,160 அதிகரித்துள்ளது. இது நகை வாங்குவோர் மத்தியில் கடும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. வெள்ளி விலையும் கிராமுக்கு ரூ.1 உயர்ந்து, ஒரு கிராம் வெள்ளி ரூ.129-க்கும், ஒரு கிலோ கட்டி வெள்ளி ரூ.1,29,000-க்கும் விற்பனையானது. தங்கம் விலை உயர்வு குறித்து, நகை வியாபாரிகள் கூறுகையில்,"பொருளாதார நிலையற்றதன்மை, தங்கத்தின் மீதான முதலீடு அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால், தங்கத்தின் தேவை உயர்ந்து, விலை அதிகரித்துள்ளது" என்றனர்.


## மார்க்கெட் விலை நிலவரம்



| BSE | NSE |
|---|---|
| 539.83 | 159.00 |
| பாயின்ட் 82,726.64 | பாயின்ட் 25,219.90 |




**தங்கம்** 1 சவரன் ₹75,040 | 1 கிராம் ₹9,380



**வெள்ளி** 1 கிலோ ₹129,000 | 1 கிராம் ₹129.00

**டாலர்** ₹86.37

**பெட்ரோல்** ₹102.63 | **டீசல்** ₹94.24



### போரை முடிவுக்கு கொண்டுவர
# ரஷ்யா அதிபர் புதினுடன் பேச தயார்: ஜெலன்ஸ்கி

**கீவ், ஜூலை 24-**

போரை முடிவுக்கு கொண்டு வர, ரஷ்ய அதிபர் புதினை நேரில் சந்தித்துப் பேச தயாராக இருக்கிறேன் என்று உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.



ரஷ்யா மற்றும் உக்ரைன் ஆகிய இருநாடுகளுக்கும் இடையில், கடந்த 2022-ம் ஆண்டு முதல் போர் நடைபெற்று வருகின்றது. இந்தப் போரில், இருதரப்பும் ஏராளமான உயிர் மற்றும் பொருள் சேதங்களைச் சந்தித்துள்ளன. இந்நிலையில், சுமார் 3 ஆண்டுகளுக்கும் மேலாக நடைபெற்று வரும் போரை நிறுத்த ரஷ்யா மற்றும் உக்ரைன் நாடுகளின் முக்கிய அதிகாரிகள் துருக்கியின் இஸ்தான்புல் நகரத்தில் பேச்சுவார்த்தை நடத்தி வந்தனர். இந்தப் பேச்சுவார்த்தைகளின் 3-ம் சுற்று நேற்று (ஜூலை 23) நடப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

இந்தப் பேச்சுவார்த்தைக்கு, மாஸ்கோவில் இருந்து வருகைதரும் குழுவுக்கு, ரஷ்ய அதிபரின் உதவியாளர் விளாதிமீர் மெடின்ஸ்கி தலைமைத் தாங்குகிறார். இதேபோல், உக்ரைன் நாட்டு குழுவுக்கு, அந்நாட்டின் தேசிய பாதுகாப்பு கவுன்சில் செயலாளர் ருஸ்டெம் உமெரோவ் தலைமைத் தாங்குகிறார். கடந்த மே 16 மற்றும் ஜூன் 2 ஆகிய தேதிகளில், இரு நாட்டு அதிகாரிகள் மேற்கொண்ட அமைதிப் பேச்சுவார்த்தைகளின் மூலம், இரு தரப்பும் தாங்கள் சிறைப்பிடித்த பிணைக் கைதிகளை விடுவித்தனர்.

முன்னதாக, உடனடியாக இருதரப்புக்கும் இடையில் போர்நிறுத்தம் கொண்டுவரப்பட வேண்டுமென, போப் பதினான்காம் லியோ உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். மேலும், இந்தப் போரை முடிவுக்குக் கொண்டுவர மத்தியஸ்தம் செய்ய தயார் என அறிவித்த போப் பதினான்காம் லியோ, ரஷ்யா மற்றும் உக்ரைன் அதிகாரிகள் வாடிகன் நகரத்துக்கு வரவேண்டும் என அழைப்பு விடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது: போரை முடிவுக்குக் கொண்டு வர, ரஷ்ய அதிபர் புதினை நேரில் சந்தித்துப் பேச தயாராக இருக்கிறேன். உக்ரைன் இந்தப் போரை ஒருபோதும் விரும்பவில்லை. மேலும் போரை தொடங்கிய ரஷ்யா தான் முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என தெரிவித்தார்.

# இஸ்ரேல் திடீர் தாக்குதல்: காசாவில் 21 பேர் உயிரிழப்பு

**டெய்ர் அல்-பலா, ஜூலை 24-**

காசாவில் ஓராண்டுக்கு மேலாக இஸ்ரேல் நடத்தி வரும் தாக்குதலில், 59 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் உயிரிழந்து உள்ளனர். 1 லட்சத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்து உள்ளனர். இதனை காசா சுகாதார அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர். இந்நிலையில், காசாவில் நள்ளிரவில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் பெண்கள், குழந்தைகள் என 21 பேர் பலியாகி உள்ளனர்.

இதில், வடமேற்கு காசாவில் நடந்த தாக்குதலில் 6 குழந்தைகள், 2 பெண்கள் உள்பட வீட்டில் இருந்த 12 பேர் பலியாகி உள்ளனர். காசாவின் வடக்கே தல் அல்-ஹவா பகுதியில் அடுக்குமாடி குடியிருப்பு மீது நடந்த தாக்குதலில், கர்ப்பிணி உள்பட 6 பேர் பலியானார்கள். 8 பேர் காயமடைந்தனர்.

நாசர் பகுதியில் இருந்த கூடாரத்தின் மீது நடந்த 3-வது தாக்குதலில் குழந்தைகள் 3 பேர் உயிரிழந்தனர். இந்த தகவலை சுகாதார அமைச்சகம் உறுதிப்படுத்தி தெரிவித்து உள்ளது. ஷிபா மருத்துவமனையும் உறுதிப்படுத்தியுள்ளது. எனினும், இதுபற்றி இஸ்ரேல் ராணுவம் உடனடியாக எதுவும் தெரிவிக்கவில்லை.

கடந்த மே மாதத்தில் இருந்து ஆயிரத்திற்கும் மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் இஸ்ரேல் படையால் உயிரிழந்து உள்ளனர். போரால் காசாவில் 20 லட்சம் பேர் பாதிக்கப்பட்டு உள்ளனர். பஞ்சம் ஏற்படும் ஆபத்தும் காணப்படுகிறது. 100-க்கும் மேற்பட்ட மனித உரிமை குழுக்கள் மற்றும் தொண்டு நிறுவனங்கள், காசாவுக்கு கூடுதல் உதவி தரப்பட வேண்டும் என வலியுறுத்தி வருகின்றன. அதுபற்றிய கடிதம் ஒன்றும் நேற்று வெளியிடப்பட்டு உள்ளது.

### என் வீட்டிலேயே எனக்கு பாதுகாப்பில்லை:
# நடிகை தனுஸ்ரீ தத்தா கண்ணீர்

**டெல்லி, ஜூலை 24-**

என் வீட்டுக்குள்ளேயே எனக்கு பாதுகாப்பு இல்லை என்று நடிகை தனுஸ்ரீ தத்தா கண்ணீர் விடியோ சமூகவரையத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது.



இந்தி நடிகை தனுஸ்ரீ தத்தா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் வெளியிட்டுள்ள வீடியோவில், தனது சொந்த வீட்டுக்குள்ளேயே தனக்கு பாதுகாப்பு இல்லை என்று தெரிவித்துள்ளார். அவர் கண்ணீர் மல்க தனது துயரைப் பதிவு செய்துள்ள அந்த வீடியோ தற்போது இணையத்தில் வைரலாகி வருகிறது.

தமிழில் விஷால் ஜோடியாக, 'தீராத விளையாட்டு பிள்ளை' படத்தில் நடித்தவர் இந்தி நடிகை தனுஸ்ரீ தத்தா. கடந்த 2018-ம் வருடம் நடிகர் நானா படேகர் மீது பாலியல் புகார் தெரிவித்திருந்தார் தனுஸ்ரீ தத்தா. 'ஹார்ன் ஓகே ப்ளீஸ்' என்ற இந்திப் படத்தில் நடித்தபோது நானா படேகர் தன்னிடம் தவறாக நடந்து கொண்டதாக போலீஸில் புகார் கொடுத்தார். இந்தியாவில் முதன்முதலாக, மீ டூ-வில் பாலியல் புகார் கூறியிருந்தது இவர்தான். இந்நிலையில், தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் நேற்றிரவு (செவ்வாய்க்கிழமை) வெளியிட்டுள்ள வீடியோவில், தனது சொந்த வீட்டுக்குள்ளேயே தனக்கு பாதுகாப்பு இல்லை என்று தெரிவித்துள்ளார்.

அந்த வீடியோவில் அவர் கண்ணீர் மல்க, குரல் நடுங்க கூறியிருப்பதாவது: 2018-ல் மீ டூ-வில் பாலியல் புகார் கூறியது முதல் இதுவரை நான் தொடர்ந்து துன்புறுத்தப்படுகிறேன். எனது வீட்டிலேயே நான் துன்புறுத்தலுக்கு உள்ளாகிறேன். எனக்கு நடக்கும் துன்புறுத்தல்களை நான் போலீஸாரை தொடர்பு கொண்டு தெரிவித்தேன். அவர்கள் காவல் நிலையம் வந்து முறைப்படி புகார் கொடுக்குமாறு கூறினர். நான் புகார் அளிக்கலாம் என்று இருக்கிறேன். என் உடல்நிலை சரியில்லை. கடந்த 4, 5 ஆண்டுகளாகவே நான் தொடர்ச்சியாக துன்புறுத்தப்படுகிறேன் என்று தெரிவித்துள்ளார்.

### இந்திய வான்வெளியில்
# பாக். விமானங்கள் பறக்க ஆகஸ்ட் 24 வரை தடை..!

**புதுடெல்லி, ஜூலை 24-**

இந்திய வான்வெளியில் பாகிஸ்தான் விமானங்கள் பறப்பதற்கான தடையை ஆகஸ்ட் 24 வரை மத்திய அரசு நீட்டித்துள்ளது.

கடந்த ஏப்ரல் 22-ம் தேதி ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் நடந்த பயங்கரவாத தாக்குதலைத் தொடர்ந்து ஏப்ரல் 30 முதல் இந்திய வான்வெளியில் பாகிஸ்தான் விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டது. இதன்மூலம், பாகிஸ்தான் விமான நிறுவனங்களின் விமானங்கள், ராணுவ விமானங்கள் உட்பட சொந்த அல்லது குத்தகைக்கு எடுத்த விமானங்கள் பறக்க தடை விதிக்கப்பட்டது. பஹல்காம் பயங்கரவாத தாக்குதலைத் தொடர்ந்து பாகிஸ்தானுக்கு எதிராக இந்தியா எடுத்த பல் வேறு நடவடிக்கைகளில் ஒன்றாக இந்த நடவடிக்கை இருந்தது.

முதலில், மே 24-ம் தேதி வரை பாகிஸ்தான் விமானங்களுக்கு தடை விதிக்கப்பட்டது. பின்னர் அந்த தடை, ஜூன் 24 வரை நீட்டிக்கப்பட்டது. மீண்டும், ஜூலை 24 வரை நீட்டிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக தற்போது ஆகஸ்ட் 24 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சிவில் விமானப் போக்குவரத்துத் துறை இணை அமைச்சர் முரளிதர மொஹோல், "இந்திய வான்வெளியில் பாகிஸ்தான் விமானங்கள் பறப்பதற்கான தடை ஆகஸ்ட் 23, 2025 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்தியாவின் வியூகம் மற்றும் பாதுகாப்பு நடைமுறைகளைக் கருத்தில் கொண்டு இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது." என தெரிவித்துள்ளார்.

சர்வதேச நேரப்படி ஆகஸ்ட் 23-ம் தேதி 11.59 மணி வரை தடை நீட்டிக்கிறது. அதாவது இந்திய நேரப்படி ஆகஸ்ட் 24, காலை 5.30 மணி வரை தடை நீடிக்கிறது. இதற்கிடையில், இந்திய விமானங்கள் பாகிஸ்தான் வான்வெளியில் பறப்பதற்கான தடையை அந்நாடு நீட்டித்துள்ளது. சிந்து நீதி நீர் ஒப்பந்தத்தை இந்தியா ரத்து செய்ததை அடுத்து அந்நாடு இந்திய விமானங்கள் தங்கள் வான்வெளியில் பறக்க கடந்த ஏப்ரல் 24-தேதி தடை அறிவித்தது. பின்னர் அந்த தடை ஜூன் 24 வரையும், பின்னர் ஜூலை 24 வரையும் நீட்டிக்கப்பட்டது. அதன் தொடர்ச்சியாக மேலும் ஒரு மாதம் தடை நீட்டிக்கப்பட்டுள்ளது.

### வங்காளதேச விமான விபத்து:
# உயிரிழப்பு 31 ஆக அதிகரிப்பு

**டாக்கா, ஜூலை 24-**

வங்காளதேசத்தில் விமானப்படைக்குச் சொந்தமான எப்.7 பி.ஜி.ஐ. விமானம் கடந்த 3 தினங்களுக்கு முன்பு பயிற்சியில் ஈடுபட்டபோது விபத்துக்கு உள்ளானது. விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் கட்டுப்பாட்டை இழந்து டாக்கா அருகே உத்தாரா பகுதியில் பள்ளி மீது விழுந்து தீப்பிடித்து எரிந்தது. இந்த விபத்தில் விமானத்தில் இருந்த விமானி மற்றும் மாணவர்கள் 20 பேர் பலியானார்கள். விபத்தில் இறந்த விமானியின் பெயர் லெப்டினன்ட் முகமது டோகிர் இஸ்லாம் என்று தெரியவந்துள்ளது.

இந்த நிலையில் விமான விபத்தில் பலியானவர்களின் எண்ணிக்கை நேற்று முன்தினம் 31 ஆக உயர்ந்து உள்ளது. காயமடைந்தவர்களுடன் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டவர்கள் அடுத்தடுத்து உயிரிழந்ததால் பலி எண்ணிக்கை உயர்ந்தது. பலியானவர்களில் 25 பேர் மாணவர்கள். அவர்களில் பெரும்பாலானவர்கள் 12 வயதுக்கு உட்பட்ட குழந்தைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது காயம் அடைந்து சிகிச்சையில் இருப்பவர்கள் எண்ணிக்கை 165 ஆக உள்ளது. அதில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால் பலி எண்ணிக்கை மேலும் உயரும் அபாயம் இருக்கிறது. விபத்தில் சிக்கிய குழந்தைகளின் உடல்களைத் தேடி அவர்களின் பெற்றோர் ஆஸ்பத்திரிகளில் அலைமோதிய காட்சி காண்பவர்களை கண்கலங்க வைத்தது.

# காலநிலை மாற்றத்தால் அதிகம் பாதிக்கப்படும் இந்திய நகரங்கள்
### உலகவங்கி அறிக்கையில் அதிர்ச்சி தகவல்

**ஜெனீவா, ஜூலை 24-**

இந்திய நகரங்கள் வெள்ளம், வெப்ப அலைகள் போன்ற காலநிலை ஆபத்துகளால் அதிக பாதிக்கப்படும் சூழலில் உள்ளன என உலக வங்கி அறிக்கை வெளியிட்டுள்ளது. இதை தடுக்க 2050 ஆம் ஆண்டுக்குள் வலுவான உள்கட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்றும் இதற்கு 2.4 டிரில்லியன் டாலர் முதலீடு தேவைப்படும் எனவும் உலக வங்கி தெரிவித்துள்ளது.

தற்போது மழை வெள்ளத்தால் ஆண்டுக்கு சுமார் 4 பில்லியன் டாலர் பொருளாதார இழப்பு ஏற்படுவதாகவும், இது 2070 ஆம் ஆண்டுக்குள் 14-30 பில்லியன் டாலராக அதிகரிக்கும் என்றும் அறிக்கை கூறுகிறது. பெரும்பாலும் நகர்ப்புற விரிவாக்கம், வெள்ள அபாயம் மற்றும் வெப்ப பாதிப்பு உள்ள பகுதிகளில் நடைபெறுவதாகவும் அறிக்கை தெரிவிக்கிறது. டெல்லி, சென்னை, சூரத், லக்னோ போன்ற நகரங்கள் அதிக வெப்ப அலை மற்றும் வெள்ள அபாயத்திற்கு உள்ளாகியுள்ளன.

வெப்பம் தொடர்பான இறப்புகள் 2050க்குள் ஆண்டுக்கு 1.44 லட்சத்தில் இருந்து 3.28 லட்சத்திற்கும் மேல் உயரக்கூடும் என்றும் அறிக்கை சுட்டிக்காட்டுகிறது. எனவே இந்த அபாயங்களைத் தடுக்க, 2050க்குள் 2.4 டிரில்லியன் டாலரும், 2070க்குள் 10.9 டிரில்லியன் டாலரும் வீட்டு வசதி, போக்குவரத்து, கழிவு மேலாண்மை போன்ற துறைகளில் முதலீடு செய்யப்பட வேண்டும் என உலக வங்கி குறிப்பிட்டுள்ளது.

# அமெரிக்கா-ஜப்பான் இடையே மிகப்பெரிய வர்த்தக ஒப்பந்தம்: அதிபர் ட்ரம்ப் அறிவிப்பு

**நியூயார்க், ஜூலை 24-**

ஜப்பானுடன் மிகப்பெரிய ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளது என்று அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

அமெரிக்கா பல்வேறு நாடுகளுடன் வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. இதில் சில நாடுகளுடன் உடன்பாடு ஏற்பட்டது. இந்த நிலையில் ஜப்பானுடன் வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் கூறியதாவது:-

ஜப்பானுடன் மிகப்பெரிய ஒப்பந்தம் செய்யப்பட்டு உள்ளது. அந்த நாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களுக்கு 15 சதவீத வரிகள் விதிக்கப்படும். இதுவரை செய்யப்பட்ட மிகப்பெரிய ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக, அமெரிக்கா 90 சதவீத லாபத்தைப் பெறும். ஜப்பான் அமெரிக்காவில் 550 பில்லியன் டாலர்களை முதலீடு செய்யும். இந்த ஒப்பந்தம் லட்சக்கணக்கான வேலைவாய்ப்புகளை உருவாக்கும். இதுபோன்ற எதுவும் இதற்கு முன்பு இருந்ததில்லை.

ஜப்பான் அமெரிக்காவிற்கு 15 சதவீத பரஸ்பர வரிகளை செலுத்தும். இது அமெரிக்காவிற்கு மிகவும் உற்சாகமான நேரம். ஜப்பானுடன் நாம் எப்போதும் சிறந்த உறவைக் கொண்டிருப்போம். இவ்வாறு அவர் கூறினார். அதேபோல் பிலிப்பைன்ஸ் நாடுடனும் வர்த்தக ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளதாக ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

### அயர்லாந்தில் ஆடைகளை களைந்து
# இந்தியர் மீது இனவெறி தாக்குதல்

**டப்ளின், ஜூலை 24-**

அயர்லாந்தில் ஆடைகளை களைத்து இந்தியர் மீது இனவெறி தாக்குதல் நடைபெற்றது.

அயர்லாந்து தலைநகர் டப்ளினில் உள்ள டல்லாட் பகுதியில், கடந்த 19-ந்தேதி 40 வயது மதிக்கத்தக்க இந்தியர் ஒருவர் சாலையில் நடந்து சென்று கொண்டிருந்தார். அப்போது அங்கு வந்த ஒரு கும்பல், அந்த நபரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர். அந்த நபர் குழந்தைகளிடம் தகாத முறையில் நடந்து கொண்டதாக அவர்கள் குற்றம்சாட்டினர்.

இதையடுத்து அந்த நபரை அவர்கள் தாக்க தொடங்கினர். அவரது ஆடைகளை களைந்து கொடூரமாக தாக்கினர். இதனைக் கண்டு அங்கிருந்த பொதுமக்கள் சிலர் ஓடிச் சென்று தாக்குதலை தடுத்து நிறுத்தினர். தாக்குதல் நடத்தியவர்கள் அங்கிருந்து தப்பிச் சென்ற நிலையில், காயமடைந்த இந்தியரை அங்கிருந்தவர்கள் மீட்டு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

இந்த சம்பவம் குறித்து வழக்குப்பதிவு செய்த அயர்லாந்து போலீசார், இனவெறி காரணமாக இந்தியர் மீது தாக்குதல் நடத்தப்பட்டதா? என்ற கோணத்தில் விசாரணை நடத்தி வருகின்றனர். தாக்கப்பட்ட இந்தியர் 3 வாரங்களுக்கு முன்பு அயர்லாந்து சென்றுள்ளார்.

அவர் மீது தாக்குதல் நடத்திய கும்பல் ஏற்கனவே டல்லாட் பகுதியில் இதேபோல் வெளிநாட்டினர் மீது தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று அங்குள்ள உள்ளூர் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருப்பது குறிப்பிடத்தக்கது.

### ஆன்லைன் வர்த்தக நிறுவனத்தில் காலாவதியான
# 278 கிலோ பேரீச்சம் பழம் பறிமுதல்


**கோவை, ஜூலை 24-**

ஆன்லைன் வர்த்தக நிறுவனத்தின் சேமிப்பு கிடங்குகளில் காலாவதியான 278 கிலோ பேரீச்சை பழம் பறிமுதல் செய்யப்பட்டது.

கோவை மாவட்டத்தில் ஆன்லைன் வர்த்தக நிறுவனத்தின் 37 சேமிப்பு கிடங்குகள் உள்ளன. இந்த கிடங்குகளில் உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் நேற்று அதிரடி சோதனை நடத்தினர். இதில், ஒத்தக்கால் மண்டபம் பகுதியில் உள்ள ஆன்லைன் வர்த்தக நிறுவனத்தின் சேமிப்பு கிடங்கில் உணவு பாதுகாப்புத்துறை அதிகாரிகள் நடத்திய சோதனையில் காலாவதியான 278 கிலோ பேரீச்சம் பழம் பறிமுதல் செய்யப்பட்டது.

பறிமுதல் செய்யப்பட்ட பேரீச்சம் பழம் சேமிப்பு கிடங்கிலேயே அழிக்கப்பட்டது. இந்த சம்பவம் தொடர்பாக உணவு பாதுகாப்புத் துறை அதிகாரிகள் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

**24-07-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** எதிர்பார்த்த இனங்களில் இருந்து தடையின்றி தனவரவு அதிகரிக்கும். புத்தி தெளிவு பெற்று ஆதாயம் தரும் புதுப்புது சிந்தனைகள் தோன்றும். பிற்பகலில் பொருட்களை பத்திரப்படுத்தி வைத்தால் இழப்புகளைத் தவிர்க்கலாம்.

**ரிஷபம்:-** வம்பு, வழக்கு மற்றும் வாக்குவாதங்களை தவிர்க்க வேண்டிய நாள். புதிய உற்சாகம் பிறக்கும். மனைவியின் உதவி மனதை லேசாக்கும். வீட்டின் கதவை வெற்றிகள் தட்டும்.

**மிதுனம்:-** மனத் திருப்தி மற்றும் தனவரவு தரும் மகிழ்வான நாள். வாக்கு வன்மையால் பயன்பெறும் வளமான நாள். செலவுகள் அதிகரிக்கும். மனச்சோர்வும், உடல் சோர்வு ஏற்படலாம்.

**கடகம்:-** புத்தி தெளிவின்மையால் நிம்மதியற்ற நிலை தென்பட்டாலும், பின்னர் புது தெம்பும், புத்தொளியும் ஏற்படும். ஆராய்ச்சி மனப்பான்மையால் ஆதாயம் உண்டு. எதிர்பாராத பணவரவு உண்டு.

**சிம்மம்:-** பலவகையிலும் பணவரவு ஏற்படும். பிறருக்கு உதவுவதால் மனம் பேரின்பம் அடையும். படிப்பில் வெற்றிகள் படிப்படியாய் வரும். பிற்பகலில் கோபத்தால் வம்பு தும்பு விலைக்கு வாங்க திருப்பது விவேகம்.

**கன்னி:-** புதிய உத்தியோகமும், உத்வேகமும் ஏற்படும். பணியில் பணிவும், துணிவும் இருந்தால் முன்னேற்றம் ஏற்படும். பெண்களால் இலாபமும், போகமும் உண்டு. விருந்தோம்பலால் மனம் மகிழும்.

**துலாம்:-** மனதில் அமைதியும், தெய்வீகத் திருப்பணிகளில் ஈடுபாடு நிலவும். சுகம், சந்தோஷம் மற்றும் உல்லாசப் பயணங்கள் ஆகியவை ஏற்படும். அரசு ஆதரவு உண்டு. பணி உயர்வு, பணவரவு எல்லாம் உண்டு.

**விருச்சிகம்:-** நினைப்பதெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் ஏதுமில்லை. நினைத்தபடி எதுவும் நடக்காது. வாழ்க்கையில் புது திருப்பங்கள் ஏற்படும். தெய்வப் பிரார்த்தனைகள் நிறைவேறும். தொழில் அபிவிருத்திக்கான திட்டங்கள் ஈடேறும்.

**தனுசு:-** மனைவி மூலம் நன்மையும், மகிழ்வும் பெருகும் நாள். நேர்மையுடன் செயல்படுங்கள். பிறரிடம் பணிவுடன் இருந்தால், பெறும் பயன்கள் அதிகரிக்கும். அரசால் அனுகூலங்கள் உண்டு.

**மகரம்:-** எல்லா நலன்களும் தரும் ஏற்றமிகு நாள். பெயரும், புகழும் உயர்ந்து பெருமை தரும். தொழிலில் தனவரவு ஏற்படும். வாகன, போஜன சுகங்கள் கிடைக்கும். புத்தாடை, ஆபரணம் புதிதாகச் சேரும் நாள்.

**கும்பம்:-** எங்கே நிம்மதி ? என மதியம் வரை இன்னல் இருந்தாலும், பின்னர் தனம், சுகம் தந்து ஏற்றம் மிகும் இனிய நாள். புதிய தோழிகள் தோழமை கிடைக்கும். வெற்றிகரமான நாள்.

**மீனம்:-** வீண் செலவுகள் ஏற்படலாம். பிற்பகலில் பயணங்களில் தடங்கல்கள் ஏற்படும். தாய்க்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். இந்த நாள் இனிய நாளாக இறைவனை இறைஞ்சுவதைத் தவிர வழியேதும் இல்லை.

### விமான விபத்து எதிரொலி:
# இந்திய மருத்துவர்கள் குழு வங்காளதேசம் விரைந்தது

**வங்காளதேசம், ஜூலை 24-**

வங்காளதேசத்தில் நடந்த விமான விபத்துக்கு மருத்துவ குழுவை இந்தியா அனுப்பி உள்ளது.



வங்காளதேச தலைநகர் டாக்கா அருகே உத்தரா பகுதியில் பள்ளி மீது ராணுவத்தின் போர் விமானம் விழுந்து நொறுங்கியது. இதில் 31 பேர் பலியானார்கள். 170-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர். அவர்களுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில் விமான விபத்தில் காயம் அடைந்தவர்களுக்கு சிகிச்சை அளிக்க வங்காளதேசத்துக்கு தீக்காய சிறப்பு டாக்டர்கள், நர்சுக்கள் குழுவை அனுப்புவதாக இந்தியா அறிவித்துள்ளது. இது தொடர்பாக வெளியுறவு அமைச்சகம் கூறும்போது, தேவையான மருத்துவ உதவியுடன் தீக்காய சிறப்பு டாக்டர்கள் மற்றும் நர்சுக்கள் குழு விரைவில் டாக்காவிற்கு சென்று பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சை அளிக்க உள்ளது.

நோயாளிகளின் நிலையை மதிப்பீடு செய்து தேவைப்பட்டால் இந்தியாவில் சிறப்பு சிகிச்சைக்கான பரிந்துரையை செய்வார்கள். அவர்களின் ஆரம்ப மதிப்பீடு மற்றும் சிகிச்சையைப் பொறுத்து கூடுதல் மருத்துவக் குழுக்களும் அனுப்பப்படலாம்" என்று தெரிவித்துள்ளது.

# 5 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சீனர்களுக்கான சுற்றுலா விசா சேவையை துவங்கும் இந்தியா

**புதுடெல்லி, ஜூலை 24-**

சீன நாட்டவர்கள் இந்தியாவுக்கு சுற்றுலா வருவதற்கான விசா சேவையை, 5 ஆண்டுகளுக்குப் பிறகு இந்தியா மீண்டும் இன்று முதல் தொடங்குகிறது.

இது தொடர்பாக சீனாவில் உள்ள இந்திய தூதரகம் சார்பில் சமூக ஊடக பக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள பதிவில், "சீன குடிமக்கள் இந்தியாவுக்கு வருகை தர சுற்றுலா விசாவுக்கு ஜூலை 24 முதல் விண்ணப்பிக்கலாம். முதலில் ஆன்லைன் முறையில் விசா கோரி விண்ணப்பிக்க வேண்டும். அதன் பிறகு, இந்திய விசா விண்ணப்ப மையத்தில் விசா விண்ணப்பம் மற்றும் பாஸ்போர்ட் உள்ளிட்டவற்றை சமர்ப்பிக்க வேண்டும்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக சீனாவின் குளோபல் டைம்ஸ் பத்திரிகை வெளியிட்டுள்ள எக்ஸ் பதிவில், "சீன குடிமக்கள் இந்தியாவுக்கு சுற்றுலா செல்ல சுற்றுலா விசா கோரி பீஜிங், ஷாங்காய், குவாங்சோ ஆகிய மாநகரங்களில் உள்ள இந்திய விசா விண்ணப்ப மையங்களில் நேரில் சமர்ப்பித்து விசா பெறலாம். 2020-ம் ஆண்டு சுற்றுலா விசா சேவை நிறுத்தப்பட்ட 5 ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது" என தெரிவிக்கப்பட்டுள்ளது.

லடாக்கில் உள்ள கல்வான் பள்ளத்தாக்கில் இந்திய - சீன ராணுவத்துக்கு இடையே ஏற்பட்ட மோதலை அடுத்து 2020 முதல் சீன நாட்டவர்களுக்கான சுற்றுலா விசா சேவையை இந்தியா தற்காலிகமாக நிறுத்தியது. மேலும், சீன முதலீட்டாளர்களுக்கு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டன. நூற்றுக்கணக்கான சீன ஆப்கள் தடை செய்யப்பட்டன. கோவிட் பெருந்தொற்றை கருத்தில் கொண்டும், சீன நாட்டினருக்கான விசா சேவை நிறுத்தம் நீட்டிக்கப்பட்டு வந்தது.

இந்நிலையில், இரு நாடுகளுக்கு இடையே சுமுக உறவு அதிகரிக்கத் தொடங்கி இருப்பதை அடுத்து, விசா சேவையை இந்தியா மீண்டும் தொடங்கி இருக்கிறது.

ராசேந்திர சோழனின் பிறந்த நாள்:

# கங்கை கொண்ட சோழபுரத்தில் அருங்காட்சியகம் அமைக்கப்படும்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு



**சென்னை, ஜூலை 24-**

ராசேந்திர சோழனின் பிறந்த நாளில் சுற்றுலா மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், கங்கை கொண்ட சோழபுரத்தில் சோழ பேரரசின் வரலாற்று சிறப்புகளையும், கடல் கடந்த வணிக தொடர்புகளையும் பறைசாற்றும் விதமாக அருங்காட்சியகம் அமைக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

மாமன்னர் ராசேந்திர சோழனின் பிறந்த நாளில், அவர் உருவாக்கிய சோழகங்கம் ஏரியில் நீர்வள ஆதார மேம்பாட்டு பணிகளும், சுற்றுலா மேம்பாட்டு பணிகளும் மேற்கொள்ளப்படுவது குறித்து தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், கங்கை கொண்டான், கடாரம் கொண்டான் என பெரும்புகழ் எய்திய தமிழ் மாமன்னர் ராசேந்திர சோழனின் பிறந்த நாளான ஆடி திருவாதிரையை அரசு விழாவாக ஆண்டுதோறும் கொண்டாடிட 2021-ம் ஆண்டு ஆணை பிறப்பித்தது நமது திராவிட மாடல் அரசு. அவரது தலைநகரான கங்கை கொண்ட சோழபுரத்தில் சோழ பேரரசின் வரலாற்று சிறப்புகளையும் கடல் கடந்த வணிக தொடர்புகளையும் பறைசாற்றும் விதமாக அருங்காட்சியகம் அமைக்கப்படும் என அறிவித்து, அதற்கும் கடந்த ஜனவரி மாதம் அடிக்கல் நாட்டினேன். காண்போரை கவர்ந்திடும் வண்ணம் அது எழுந்து வருகிறது. இவற்றின் தொடர்ச்சியாக, ராசேந்திர சோழனின் பிறந்தநாளில், அவர் உருவாக்கிய சோழகங்கம் ஏரியில் நீர்வள ஆதார மேம்பாட்டு பணிகளும் - சுற்றுலா மேம்பாட்டு பணிகளும் மேற்கொள்ளப்படும் என்று அறிவிப்பதில் பெருமகிழ்ச்சி கொள்கிறேன் என தெரிவித்து உள்ளார்.

# தமிழ்நாடு திராவிட மாடல் 2.0-ல் நாட்டில் முதல் மாநிலமாக உயரும்

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம்

**சென்னை, ஜூலை 24-**

திமுக ஆட்சியில் இரு மடங்கு வளர்ச்சி என்று பெருமிதம் தெரிவித்துள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், அடுத்து வர உள்ள திராவிட மாடல் 2.0-ல் முதல் மாநிலமாக உயருவோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு தனிநபர் வருமானத்தில் இந்தியாவில் இரண்டாம் இடத்தில் உள்ளதாக நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்திருந்தார். இந்நிலையில் அவரது எக்ஸ் தள பதிவை டேக் செய்து முதல்வர் மு.க.ஸ்டாலின் திமுக ஆட்சியில் இரு மடங்கு வளர்ச்சி என பெருமிதம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:- கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் வளர்ச்சியைக் காட்டிலும் இருமடங்கு மிஞ்சினோம்! அடுத்து வரவுள்ள திராவிட மாடல் 2.0-இல் முதல் மாநிலமாக உயருவோம் இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# முதல்வரின் உடல்நிலை குறித்து வதந்தி பரப்பினால் நடவடிக்கை

**சென்னை, ஜூலை 24-**

முதல்வர் மு.க.ஸ்டாலின் உடல்நிலை குறித்து வதந்தி பரப்பினால் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அப்போலோ மருத்துவமனை தரப்பு அறிக்கையை தவிர மற்ற தகவல்கள் உண்மை இல்லை என்றும் தமிழக அரசு தெரிவித்துள்ளது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் கடந்த 3 நாட்களுக்கு முன் காலையில் வழக்கமான நடைபயிற்சி மேற்கொண்டபோது அவருக்கு லேசான தலைச்சுற்றல் ஏற்பட்டது. இதனால், அவர் சென்னை கிரீம்ஸ் சாலையில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு மருத்துவர்கள் கண்காணிப்பில் முதல்வருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

3 நாட்கள் மருத்துவமனையில் தங்கி ஓய்வெடுக்க வேண்டும் என்று டாக்டர்கள் அறிவுறுத்திய நிலையில், முதல்வர் அங்கு தங்கியுள்ளார். இதற்கிடையில், முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆஸ்பத்திரியில் இருந்தபடியே அரசுப் பணிகள் குறித்து ஆலோசனை மேற்கொண்டு வருகிறார்.

இந்தநிலையில், முதல்வர் உடல்நிலை குறித்து சமூக வலைதளங்களில் தவறான தகவல் மற்றும் வதந்திகள் பரப்பினால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும். அப்போலோ மருத்துவமனை தரப்பு அறிக்கையை தவிர மற்ற தகவல்கள் உண்மை இல்லை என்று மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பீகாரில் 52 லட்சம் வாக்காளர்கள் நீக்கம்

## தேர்தல் கமிஷன் நடவடிக்கை

**பாட்னா, ஜூலை 24-**

பீகாரில் 52 லட்சம் வாக்காளர்கள் நீக்கி தேர்தல் கமிஷன் நடவடிக்கை எடுத்துள்ளது.

பீகார் மாநிலத்தில் விரைவில் சட்டசபை தேர்தல் நடைபெறவுள்ளது. இதையொட்டி அங்கு சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தம் நடைபெற்று வருகிறது. தேர்தல் கமிஷன் அதிகாரிகள் ஒவ்வொரு வீடாக சென்று, பட்டியலில் உள்ள வாக்காளர்களை சரிபார்த்து வருகிறார்கள்.

இந்த சரிபார்ப்பின் போது பட்டியலில் இடம் பெற்றுள்ள 18 லட்சம் வாக்காளர்கள் இறந்து விட்டதும், 26 லட்சம் பேர் வேறு தொகுதிகளுக்கு மாறி இருப்பதும், 7 லட்சம் பேர் இரு வேறு இடங்களில் இடம் பெற்று இருப்பதும் தெரியவந்துள்ளது. இதுபோன்ற காரணங்களால் 52 லட்சம் வாக்காளர்களை பட்டியலில் இருந்து நீக்கி தேர்தல் கமிஷன் அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது.

ராகுல்காந்தி தலைமையில்

# எதிர்க்கட்சி எம்.பி.க்கள் 2-வது நாளாக போராட்டம்



**புதுடெல்லி, ஜூலை 24-**

பீகார் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகளுக்கு எதிராக பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி எம்பிக்கள் நேற்று 2-வது நாளாக போராட்டம் நடத்தினர்.

நிகழாண்டு நடைபெறும் பீகார் பேரவைத் தேர்தலை முன்னிட்டு, 22 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த மாநிலத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. தொடர்ந்து அனைத்து மாநிலங்களிலும் இந்த பணிகள் நடைபெறும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, பாராளுமன்ற வளாகத்தில் மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி தலைமையில் எதிர்க்கட்சிகளைச் சேர்ந்த எம்பிக்கள் இரண்டாவது நாளாக போராட்டம் நடத்தினர். சமாஜவாதி தலைவர் அகிலேஷ் யாதவ், பிரியங்கா காந்தி, திமுகவின் கனிமொழி, டி.ஆர். பாலு உள்ளிட்டோர் கலந்துகொண்டனர். பதாகைகள் ஏந்தி எம்பிக்கள் முழக்கமிட்டதால் பாராளுமன்ற வளாகத்தில் பரபரப்பு ஏற்பட்டது. முன்னதாக, வாக்காளர் திருத்த பணிகள் தொடர்பாக விவாதிக்க வேண்டும் என்று செவ்வாய்க்கிழமை இரு அவைகளிலும் எதிர்க்கட்சி எம்பிக்கள் அமளியில் ஈடுபட்டனர். இதனால், பாராளுமன்ற அலுவல்கள் முடங்கி, செவ்வாய்க்கிழமை முழுவதும் இரு அவைகளும் ஒத்தி வைக்கப்பட்டது.

பூமியை கண்காணிக்கும் செயற்கைக்கோளுடன்

# ஜூலை 30-ல் விண்ணில் பாய்கிறது ஜி.எஸ்.எல்.வி. எப்-16 ராக்கெட்

**ஸ்ரீஹரிகோட்டா, ஜூலை 24-**

'நிசார்' செயற்கைக்கோளுடன் ஜி.எஸ்.எல்.வி. எப்-16 ராக்கெட் வரும் 30-ம் தேதி விண்ணில் பாய்கிறது. செயற்கைக்கோளை ஏவும் பணியில் இஸ்ரோ-நாசா விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) மற்றும் அமெரிக்காவின் நாசாவின் முதல் கூட்டு செயற்கைக்கோளான நாசா-இஸ்ரோ செயற்கை துளை ரேடார் (நிசார்), இஸ்ரோவின் ஜி.எஸ்.எல்.வி. எப்-16 ராக்கெட் மூலம் ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவின் சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்திலிருந்து வருகிற 30-ம் தேதி (புதன்கிழமை) மாலை 5.40 மணிக்கு விண்ணில் ஏவப்படுகிறது. இது பூமியிலிருந்து 743 கிலோ மீட்டர் சூரிய ஒத்திசைவான சுற்றுப்பாதையில் ஜி.எஸ்.எல்.வி. எப்-16 ராக்கெட், நிசார் செயற்கைக்கோளை 98.40 சாய்வுடன் செலுத்த உள்ளது.

2 ஆயிரத்து 392 கிலோ எடையுள்ள நிசார், ஒரு தனித்துவமான பூமி கண்காணிப்பு செயற்கைக்கோள். நாசாவின் எல்-பேண்ட் மற்றும் இஸ்ரோவின் எஸ்-பேண்ட் என்ற இரட்டை அதிர்வெண் செயற்கை துளை ரேடார் வகையை சேர்ந்தவையாகும். பூமியைக் கண்காணிக்கும் இரட்டை அதிர்வெண் கொண்ட முதல் செயற்கைக்கோள் நிசாராகும். இவை இரண்டும் இஸ்ரோவின் மாற்றியமைக்கப்பட்ட ஐ-3 கே என்ற செயற்கைக்கோளில் ஒருங்கிணைக்கப்பட்ட நாசாவின் 12 மீட்டர் விரிக்கக் கூடிய மெஷ் பிரதிபலிப்பான் ஆண்டெனாவைப் பயன்படுத்துகின்றன.

நிசாரில் முதல் முறையாக 'ஸ்வீப்சார்' என்ற நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி 242 கிலோ மீட்டர் பரப்பளவு மற்றும் உயர் இடம்சார்ந்த தெளிவுத்திறனுடன் பூமியைக் கண்காணிக்கும். இந்த செயற்கைக்கோள் முழு உலகத்தையும் ஸ்கேன் செய்து 12 நாள் இடைவெளியில் அனைத்து வானிலை, பகல் மற்றும் இரவு தரவுகளையும் வழங்குவதுடன் பரந்த அளவிலான பயன்பாடுகளை செயல்படுத்தும். நிசார் பூமியின் மேற்பரப்பில் ஏற்படும் சிறிய மாற்றங்களைக் கூட கண்டறிய முடியும்.

அதாவது தரை சிதைவு, பனிப்படல இயக்கம் மற்றும் தாவர இயக்கவியல். கடல் பனி வகைப்பாடு, கப்பல் கண்டறிதல், கரையோர கண்காணிப்பு, புயல் தன்மை, மண்ணின் ஈரப்பதத்தில் ஏற்படும் மாற்றங்கள், மேற்பரப்பு நீர் வளங்களை வரைபடம் செய்தல் மற்றும் கண்காணித்தல், பேரிடர் ஆகியவற்றை கண்டறியும். நிசார் ஏவுதல் என்பது இஸ்ரோ மற்றும் நாசா மற்றும் ஜெ.பி.எல். என்ற தொழில்நுட்ப குழுக்களுக்கு இடையே 10 ஆண்டுகளுக்கு மேலாக வலுவான தொழில்நுட்ப ஒத்துழைப்பின் விளைவாகும். தற்போது ஸ்ரீஹரிகோட்டாவில் ஜி.எஸ்.எல்.வி. எப்-16 ராக்கெட்டின் மேல்பகுதியில் நிசார் செயற்கைக்கோள் பொருத்தும் பணி நடந்து வருகிறது. இந்த செயற்கைக் கோளை ஏவும் பணியில் இஸ்ரோ-நாசா விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். மேற்கண்ட தகவல்களை இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.

# மீண்டும் விபத்தில் சிக்கிய நடிகர் அஜித்



**ரோம், ஜூலை 24-**

இத்தாலியில் ஜிடி 4 கார் பந்தயம் நடைபெற்றது. இதில் நடிகர் அஜித் குமார் பங்கேற்றார். இந்த கார் பந்தயத்தில் அஜித் குமார் ஓட்டிச் சென்ற கார் மீண்டும் விபத்தில் சிக்கியது.

பந்தயத்தில் முன்னால் சென்ற கார் திடீரென டிராக்கின் குறுக்கே நின்றதால் அதன்மீது அஜித்தின் கார் மோதி விபத்துக்குள்ளானது. இந்த விபத்தில் அஜித் காரின் இடதுபுற முன்பகுதி உடைந்து சேதமடைந்தது. காரில் இருந்த அஜித்திற்கு காயம் எதுவும் ஏற்படவில்லை. இந்நிலையில் கார் பந்தயத்தின்போது அஜித் குமாரின் காருக்குள் இருந்த கேமராவில் பதிவான அதிர்ச்சியூட்டும் விபத்துக்காட்சி தற்போது வெளியாகி உள்ளது.

குஜராத் மாநிலத்தில்

# பயங்கரவாதிகள் 4 பேர் கைது



**அகமதாபாத், ஜூலை 24-**

அல்கொய்தா பயங்கரவாத அமைப்பைச் சேர்ந்த நான்கு பேரை குஜராத் பயங்கரவாத தடுப்பு பிரிவு அதிகாரிகள் கைது செய்தனர்.

இரண்டு பேர் குஜராத்திலும், ஒருவர் டில்லியிலும், மற்றொருவர் நொய்டாவிலும் கைதாகி உள்ளனர்.

இவர்கள் சமூக வலைதளங்கள் மூலம் பயங்கரவாத செயல்களுக்கு ஆட்களை சேர்த்து வந்தது தெரியவந்துள்ளது.

இது குறித்து விரைவில் பத்திரிகையாளர்களை சந்தித்து கூடுதல் தகவல்கள் தெரிவிக்கப்படும் என தெரிவித்துள்ள போலீசார், அவர்களிடம் இருந்து ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டதா இல்லையா என்பதை தெரிவிக்கவில்லை.

அவர்களின் செயல்பாடுகள், சதிச் செயலில் ஈடுபட்டனரா என்பது விசாரணை நடந்து வருகிறது. இந்த நடவடிக்கை பயங்கரவாதத்துக்கு எதிரான நடவடிக்கையில், இது முக்கியமானது என குஜராத் போலீசார் தெரிவித்துள்ளனர்.

# 90 அணைகளில் 185 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது

## தமிழக நீர்வளத்துறை தகவல்

**சென்னை, , ஜூலை 24-**

தமிழகத்தில் 90 அணைகளில் 185 டி.எம்.சி. தண்ணீர் கையிருப்பு உள்ளதாக நீர்வளத்துறை தெரிவித்துள்ளது.

தமிழகத்தில் தற்போது பரவலாக பெய்து வரும் மழையால் நீர்தேக்கங்களுக்கு தண்ணீர் வரத்து இருந்து வருகிறது. நீர்வளத்துறை பராமரிப்பில், 90 அணைகள் மற்றும் நீர் தேக்கங்கள் உள்ளன. இவற்றின் ஒட்டுமொத்த கொள்ளளவு 224 டி.எம்.சி. ஆகும். இதில், மேட்டூர், பவானிசாகர், பெரியாறு உள்ளிட்ட 15 முக்கிய அணைகளின் கொள்ளளவு மட்டும் 198 டி.எம்.சி. இந்த அணைகள் பல்வேறு மாவட்டங்களின் பாசனம், குடிநீர் தேவையை மட்டுமின்றி, தொழிற்சாலைகளின் தண்ணீர் தேவையையும் பூர்த்தி செய்கின்றன.

தற்போது, 90 அணைகளிலும் சேர்த்து, 185.958 டி.எம்.சி. அதாவது 82.91 சதவீதம் தண்ணீர் கையிருப்பில் உள்ளது. இதனால் மாநிலம் முழுவதும் குடிநீர் தட்டுப்பாடு இன்றி வினியோகிக்க முடிகிறது.

அதிகபட்சமாக சேலம் மாவட்டம் மேட்டூர் அணையில் 93.31 டி.எம்.சி, ஈரோடு பவானிசாகரில் 27, கோவை பரம்பிக்குளத்தில் 12.87, சேலையாறு 4.98, சாத்தனூர் 4.85, பெரியாறு 4.69, வைகை 4.51 டி.எம்.சி. அதிகபட்சம் இருப்பு உள்ளது. பருவ மழை மூலம் சேமிக்கப்பட்டுள்ள தண்ணீர் பாசனம் மற்றும் குடிநீர் தேவைக்காக திறக்கப்பட்டு வருகிறது. தமிழகத்தில் 14 ஆயிரத்து 141 பாசன ஏரிகள் உள்ளன. அவற்றில் 422 ஏரிகள் 100 சதவீதம் நிரம்பியுள்ளது. 1,028 ஏரிகள் 76 முதல் 99 சதவீதம் நிரம்பியுள்ளன. 1,716 ஏரிகள் 51 சதவீதம் முதல் 75 சதவீதம் நிரம்பியுள்ளன. அதேபோல், 3 ஆயிரத்து 543 ஏரிகள் 26 முதல் 50 சதவீதமும், 5 ஆயிரத்து 178 ஏரிகள் 1 முதல் 25 சதவீதமும் நிரம்பியுள்ளது. 2,254 ஏரிகள் நீர் இல்லாமல் வறண்டு கிடக்கின்றன.

இதில் அதிகபட்சமாக மதுரை மாவட்டத்தில் உள்ள 1,340 நீர் நிலைகளில் 700 நீர் நிலைகள் வறண்டு கிடக்கின்றன. சிவகங்கையில் உள்ள 1,459 நீர் நிலைகளில் 522 நீர் நிலைகள் வறண்டு கிடக்கின்றன. அதேபோல் நெல்லையில் உள்ள 780 நீர் நிலைகளில் 194 நீர் நிலைகள் வறண்டு கிடக்கின்றன. அரியலூரில், மயிலாடுதுறை, நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் உள்ள அனைத்து நீர் நிலைகளில் போதுமான அளவு தண்ணீர் இருப்பு உள்ளது.

ரூ.5.9 கோடி சொத்து ஆவணம் தாக்கல் செய்ய

# நடிகர் ரவி மோகனுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவு



**சென்னை, ஜூலை 24-**

புதிய படத்தில் நடிக்க வாங்கிய அட்வான்ஸ் திருப்பித்தராத விவகாரத்தில், நடிகர் ரவி மோகன், 5.90 கோடிக்கான சொத்து ஆவணங்களை தாக்கல் செய்ய வேண்டும் என்று சென்னை ஐகோர்ட் உத்தரவிட்டது.

ப்ரோ கோட் என்ற புதிய படத்தில் நடிப்பதற்காக, பட தயாரிப்பு நிறுவனம் தரப்பில் நடிகர் ரவி மோகனுக்கு அட்வான்ஸ் கொடுத்திருந்தது. 80 நாட்கள் கால்ஷீட் கொடுத்தும் படத்தை நிறுவனம் தொடங்கவில்லை. கொடுத்த அட்வான்ஸை திருப்பிக் கேட்டது. பட தயாரிப்பு நிறுவனம் 9 கோடி ரூபாய் இழப்பீடு தர வேண்டும் என்று கேட்டு ரவி மோகன், சென்னை ஐகோர்ட்டில் வழக்கு தொடர்ந்தார். தயாரிப்பு நிறுவனமான பாபி டச் கோல்டு யுனிவர்சல் சார்பில், நடிகர் ரவி மோகன் வாங்கிய அட்வான்ஸ் பணத்தை திரும்ப ஒப்படைக்க வேண்டும் என்று வழக்கு தொடரப்பட்டது.

வழக்கு நேற்று சென்னை ஐகோர்ட்டில் வழக்கு விசாரணைக்கு வந்தது. 'இந்த பிரச்னையில் நடிகர் ரவி மோகன் வாங்கிய அட்வான்ஸ் பணத்தை திரும்ப அளிப்பதில் என்ன சிரமம் உள்ளது. இதனால் எதிர்மறையான விளம்பரம் தான் கிடைக்கும்' என்று கேள்வி எழுப்பிய நீதிபதி, 'ரவி மோகன், ரூ.5.90 கோடிக்கான சொத்து ஆவணங்களை 4 வாரங்களில் தாக்கல் செய்ய வேண்டும்' என்று உத்தரவிட்டார். இரு தரப்பிற்கு இடையேயான பிரச்னையை தீர்க்க மத்தியஸ்தரை நியமித்தும் கோர்ட் உத்தரவிட்டது.

# 28 கோடி இந்தியர்கள் கடனாளிகள்: பார்லி.யில் மத்திய அரசு தகவல்

**புதுடெல்லி, ஜூலை 24-**

இந்தியாவில் சுமார் 28 கோடி தனிப்பட்ட கடனாளிகள் உள்ளனர் என்று பாராளுமன்றத்தில் மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்தியாவில் 140 கோடிக்கும் அதிகமான மக்கள் உள்ளனர். இவர்களின் கடன் விவரங்கள் குறித்து எம்.பி.க்கள் பாராமன்றத்தில் கேள்வி எழுப்பினர். அதற்கு மத்திய அரசு எழுத்து பூர்வமாக பதிலளித்தது. அதன் விவரம் வருமாறு:- கடந்த மார்ச் மாதம் நிலவரப்படி கிரெடிட் தகவல் நிறுவனமான சிபில் தெரிவித்ததின்படி, இந்தியாவில் சுமார் 28 கோடி தனிப்பட்ட கடனாளிகள் உள்ளனர். இவர்களுக்கான சராசரி கடன் ரூ.4.8 லட்சமாக உயர்ந்துள்ளது.

இது 2023-ல் ரூ.3.9 லட்சமாக இருந்தது. ஆனால் இது மொத்த மக்கள்தொகையைக் கருத்தில் கொண்ட சராசரி கடன் அல்ல. மேலும், இந்த கடன்களில் பெரும்பாலானவை உயர் கிரெடிட் மதிப்பெண் உள்ள நபர்களுக்கே வழங்கப்பட்டவை. அவர்கள் பெரும்பாலும் சொத்து உருவாக்க குறித்த கடன்களையே எடுத்துள்ளனர்.

குடும்ப நிதி சொத்துகள் ஜி.டி.பி.யுடன் ஒப்பிடும் போது, 2023-ல் 103.5 சதவீதம் இருந்தது. 2024-ல் 106.2 சதவீதம் ஆக உயர்ந்துள்ளது. இது மக்கள் நிதி நிலை மேம்பட்டிருப்பதை காட்டுகிறது. இந்தாண்டில் இந்தியாவின் வெளிநாட்டு கடன் ரூ.61.47 லட்சம் கோடியாகும். இது கடந்த ஆண்டைவிட 10.1 சதவீதம் அதிகம். ஆனாலும், வெளிநாட்டு கடன் ஜி.டி.பி. விகிதம் 19.1 சதவீதம் மட்டுமே என்பதால், இது சீராகவே கட்டுப்பாட்டில் உள்ளது. இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# ஜூன் மாதத்திற்கு பிறகு குறைந்தது கொரோனா தொற்று: மத்திய அரசு

**புதுடெல்லி, ஜூலை 24-**

ஜூன் மாதத்திற்கு பிறகு கொரோனா தொற்று குறைந்து விட்டதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

கொரோனா தொற்று, புதிய வைரஸ் உருமாற்றம் காரணமாக கடந்த மே மாதத்தில் மீண்டும் அதிகரித்து வந்தது. இதையடுத்து மாநில அரசுகளை எச்சரித்த மத்திய அரசு, கொரோனா பரவலை தீவிரமாக கண்காணித்து வந்தது. புதிய வகை கொரோனா தொற்று, சுகாதார அபாயநிலையை ஏற்படுத்தாது என்று அறிவிக்கப்பட்டது. இந்த நிலையில் கொரோனா பாதிப்பு சரிவடைந்துவிட்டதாக மத்திய அரசு தகவல் வெளியிட்டு உள்ளது.

மத்திய சுகாதாரத்துறை மந்திரி பிரதாப்ராவ் ஜாதவ் மாநிலங்களவையில் எழுத்துப்பூர்வமாக சமர்ப்பித்த அறிக்கையில் இதுகுறித்து கூறி இருப்பதாவது:-

உலக சுகாதார நிறுவனம், கிழக்கு மத்திய தரைகடல் நாடுகள், தென்கிழக்கு ஆசிய நாடுகளில் கொரோனா பரவல் வேகமெடுத்து உள்ளதாக மே 28-ந்தேதி அறிவித்தது. மாநில அரசுகள் தயார் நிலையில் இருக்க பரிந்துரைக்கப்பட்டன. இந்த ஆண்டின் தொடக்கத்தில் புதிய வகை வைரஸ் உருமாற்றத்தில் இருந்து பரவத் தொடங்கிய கொரோனா மே மாதம் வேகமெடுத்து ஜூன் 13-ந்தேதி உச்சம் தொட்டிருந்தது. அதன்பிறகு சரிவடைந்துவிட்டது. இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

### தலைவர்கள் சொல்வதை படிங்க....



**கூ**ட்டணி ஆட்சியை பற்றி அமித் ஷாவும், அ.தி.மு.க. பொதுச் செயலாளர் பழனிசாமியும் தான் முடிவு செய்வார்கள். தற்போது தி.மு.க.-வுக்கும், பா.ஜ.க. கூட்டணிக்கும் தான் போட்டி நடக்கிறது. தி.மு.க. கூட்டணியை விட்டு காங்கிரஸ் விலகினால் நான் அரசியலை விட்டே விலகி விடுகிறேன்.

**- குஷ்பு**



**து**ணை ஜனாதிபதி ஜக்தீப் தன்கர் ஏன் ராஜினாமா செய்தார் என்பதற்கு அரசாங்கம் பதிலளிக்க வேண்டும். இதில் ஏதோ சந்தேகம் இருக்கிறது என்று எனக்கு தோன்றுகிறது. அவரது உடல்நிலை நன்றாக உள்ளது. அவரது ராஜினாமாவுக்குப் பின்னால் யார், என்ன இருக்கிறது என்பது நாட்டுக்குத் தெரிய வேண்டும்.

**- மல்லிகார்ஜுன கார்கே**



**த**மிழ்நாடு மீனவர்களை இலங்கை கடற்படை சிறைபிடிப்பதை தடுக்க, கச்சத்தீவு ஒப்பந்தத்தை மறுபரிசீலனை செய்ய வேண்டும். கச்சத்தீவு ஒப்பந்தத்தை திரும்பப்பெற மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யும் விவகாரத்தில் நிரந்தர தீர்வு காண வேண்டும்.

**- வைகோ**



**த**மிழக தேர்வர்களுக்கு வெளி மாநிலங்களில் தேர்வு மையங்கள் ஒதுக்கப்பட்டிருப்பது கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. தொலைதூரங்களில் உள்ள தேர்வு மையங்களுக்கு செல்ல கூடுதலாக செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. நீட் தேர்வர்களுக்கு அந்தந்த மாநிலங்களிலேயே தேர்வு மையங்களை ஒதுக்க வேண்டும்.

**- செல்வப்பெருந்தகை**

நீலகிரி மாவட்டத்தில்

# விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம்: கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நடைபெற்றது



ஊட்டி,ஜூலை.24-

நீலகிரி கலெக்டர் கூடுதல் அலுவலகத்தில், விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கலெக்டர் தெரிவித்ததாவது :

நீலகிரி மாவட்டத்தில், வேளாண் தோட்டக்கலை மற்றும் இதர துறைகளின் திட்டங்கள் மற்றும் தொழில் நுட்ப விளக்கங்கள் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், ஒவ்வொரு மாதமும் மின்னனு செய்தி மடல் வெளியிட தீர்மானிக்கப்பட்டு இன்று வெளியிடப்பட்டு துவக்கி வைக்கப்பட்டது.

இந்த செய்தி மடலின் மின்னனு பதிவு அனைத்து விவசாய வாட்ஸ்அப் குழுக்களுக்கு பகிரப்படும் எனவும், விவசாயிகள் பின்பற்றும் உயிர்தொழில் நுட்ப முறைகளை தோட்டக்கலை இணை இயக்குநர் அலுவலக மின்னஞ்சலில் தெரிவித்தால அவற்றை அடுத்த செய்தி மடலில் பிரசுரிக்க ஏதுவாக இருக்கும் என கலெக்டர் தெரிவித்தார்.

மேலும், இக்கூட்டத்தில், மசினகுடி பகுதியில் தென்னை மற்றும் வெண்ணெய் பழ செடிகளில் ஏற்பட்டுள்ள நோய் மற்றும் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த தோட்டக்கலைத்துறைஇ வேளாண் அறிவியல் நிலையம் மற்றும் தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையம் இணைந்து கள ஆய்வு மேற்கொண்டு விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்க கேட்டுக்கொள்ளப்பட்டது.

உதகை வட்டாரத்தில் தேவர்சோலை பகுதியில் தொடர்ந்து காணப்படும் கரடியினை கூண்டு வைத்து உடனடியாக பிடிக்க வனத்துறைக்கு அறிவுறுத்தப்பட்டது. கூட்டு பட்டா விவசாயிகளுக்கு விவசாய பயன்பாட்டிற்காக தனிநபர் அடையாள அட்டை பெறுவதிலுள்ள சிரமங்கள் தளர்வு செய்யப்பட்டுள்ளது.

எனவே அனைத்து விவசாயிகளும் தனிநபர் அடையாள அட்டை பெற பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டது. இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன் கூட்டுறவு சங்கங்களின் இணை பதிவாளர் தயாளன், வேளாண்மைத்துறை செயற்பொறியாளர் செந்தில்குமார், மாவட்ட வழங்கல் அலுவலர் சரவணன், மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் சதானந்தகல்கி, தோட்டக்கலைத்துறை துணை இயக்குநர்கள் நவநீதா, ஜெயலட்சுமி, உதவி இயக்குநர்கள் அனிதா, பைசல் உட்பட அரசுத்துறை அலுவலர்கள் மற்றும் விவசாயிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# ஈரோடு மாநகராட்சி 2வது மண்டலத்தில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் அமைச்சர் சு.முத்துசாமி பொதுமக்களுக்கு அரசு சலுகைகளை வழங்கினார்



ஈரோடு ஜூலை 24

ஈரோடு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்களால் "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாம் தொடங்கி வைக்கப்பட்டு மாவட்டந் தோறும் முகாம்கள் நடைபெற்று வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் மொத்தம் 340 முகாம்கள் நடைபெற உள்ளது.அதன் ஒரு பகுதியாக ஈரோடு மணிக்கம்பாளையம் ஈபீஎஸ் தனியார் மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமில், தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை ஆயதீர்வை துறை அமைச்சர் சு முத்துசாமி பொதுமக்களுக்கு அரசு சலுகைகளை வழங்கினார்.இம் முகாமில் ஈரோடு கலெக்டர் ச கந்தசாமி, ஈரோடு மாநகராட்சி ஆணையாளர் அர்பித் ஜெயின் ஈரோடு மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் துணை மேயர் வே.செல்வராஜ், இரண்டாவது மண்டல தலைவர் காட்டு சுப்பு (எ) சுப்பிரமணியம், மாமன்ற உறுப்பினர்கள் ஜெகதீஷ், ஜெகநாதன், ஈரோடு மாநகராட்சி அதிகாரிகள் மற்றும் பலரும் கலந்து கொண்டனர். இந்த முகாமில் மனு கொடுத்த அனைவரும் குளிர்பானம் மற்றும் உணவு ஏற்பாடுகளை இரண்டாவது மண்டல தலைவர் காட்டு சுப்பு (எ) சுப்பிரமணியம் சிறந்த முறையில் செய்து இருந்தார். ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு மனுக்கள் கொடுத்தனர்.

# ஈரோடு கொங்கு கலை அறிவியல் கல்லூரியில் நொய்யல் தமிழ்மன்ற நிகழ்வுகளின் தொடக்க விழா



ஈரோடு ஜூலை 24

ஈரோடு, கொங்கு கலை அறிவியல் கல்லூரியின் தமிழ்த்துறை சார்பாக நொய்யல் தமிழ் மன்றத்தின் 2025-2026 ஆம் கல்வியாண்டிற்கான நிகழ்வுகளின் தொடக்க விழா, கல்லூரியின் தாளாளர் பிடி தங்கவேல் அவர்களின் வழிகாட்டுதலில் நேற்று நடைபெற்றது.

கல்லூரியின் முதல்வர் முனைவர். எச். வாசுதேவன் வாழ்த்துரை வழங்கினார். சிறப்பு விருந்தினராக நாமக்கல், கால்நடை மருத்துவக் கல்லூரியின் உடற்கூறியல் துறைத்தலைவர் பேராசிரியர் முனைவர் ஆ.குமரவேள் கலந்து கொண்டு, 'மெல்லத் தமிழ் இனி வாழும்' எனும் தலைப்பில் மாணவர்கள் வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்,

அதுவே உங்கள் மனதை அழகாக்கும் என்றும் ஆணும் பெண்ணும் நிகரென உணர்வுகளைப் போற்றி மதித்துப் பழக வேண்டும், அதனை தமிழ் நமக்குக் கற்றுத்தரும், தமிழை வாசியுங்கள் நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது என்று பேசினார்

முன்னதாக நொய்யல் தமிழ் மன்றத்தின் மாணவப் பொறுப்பாளர்கள் அறிமுகமும் சாரல் இதழ் வெளியீடும் நடைபெற்றது.

இந்நிகழ்விற்கு தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் ப.தினகரன் வரவேற்புரை ஆற்றினார். தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர் முனைவர் ம.உமாதேவி நன்றி கூறினார்

இவ்விழாவிற்கான ஏற்பாடுகளைத் தமிழ்த்துறை பேராசிரியர்கள் மற்றும் மன்றப் பொறுப்பாளர்களும் செய்திருந்தனர்.

ஈரோடு மாவட்டத்தில்

# உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் முகாம்கள்: கலெக்டர் ச.கந்தசாமி ஆய்வு



ஈரோடு,ஜூலை.24-

ஈரோடு மாவட்டம், ஈரோடு மாநகராட்சி மண்டலம் 2, ஈபிஸ் மஹால் மற்றும் நம்பியூர் பேரூராட்சி, ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்யாண மண்டபம் ஆகிய இடங்களில் ஈரோடு கலெக்டர் ச.கந்தசாமி, "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் முகாம்கள் நடைபெற்று வருவதை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

"உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் ஈரோடு மாநகராட்சி மண்டலம் 2, ஈபிஸ் மஹால் மற்றும் நம்பியூர் பேரூராட்சி, ஸ்ரீ வெங்கடேஸ்வரா கல்யாண மண்டபம் ஆகிய இடங்களில் நடைபெற்ற முகாம்களில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களை பெற்று கொண்டார். பொதுமக்கள் அளிக்கும் மனுக்கள் கணினியில் பதிவேற்றம் செய்யப்பட்டு பொதுமக்களுக்கு ஒப்புகை சீட்டு வழங்கப்பட்டு வருவதையும் பார்வையிட்டு, இதுவரை பெறப்பட்ட மொத்த மனுக்களின் எண்ணிக்கை குறித்து ஆய்வு மேற்கொண்டார். மேலும், முகாமிற்கு வருகை தந்த பொதுமக்களிடம் அவர்களின் கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தார்.

இன்று (24.07.2025) ஈரோடு மாநகராட்சி மண்டலம் 3, பெருந்துறை ரோடு, ஆலயமணி மஹால், சத்தியமங்கலம் நகராட்சி, திப்புசுல்தான் ரோடு, ஸ்ரீ சுந்தர் மஹால், அவல்பூந்துறை பேரூராட்சி, ராசம்மாள் திருமண மண்டபம், கொளப்பலூர் பேருராட்சி, JS மஹால், அம்மாபேட்டை ஒன்றியம், ஆலாம்பாளையம், ஸ்ரீ முத்துக்குமரன் மஹால் மற்றும் பவானி ஒன்றியம், கவுந்தப்பாடி, பாவா திருமண மண்டபம் ஆகிய இடங்களில் "உங்களுடன் ஸ்டாலின்" சிறப்பு திட்ட முகாம்கள் நடைபெற உள்ளது. இம்முகாம்களை பொதுமக்கள் பயன்படுத்தி கொண்டு தங்களது கோரிக்கைகள் அடங்கிய மனுக்களை வழங்கி பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில் ஈரோடு மாநகராட்சி ஆணையர் அர்பித் ஜெயின், துணை ஆணையர் கு.தனலட்சுமி, வட்டாட்சியர்கள் முத்துகிருஷ்ணன் (ஈரோடு), கேசவமூர்த்தி (நம்பியூர்) உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனார்.

# நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் கருத்தரங்கம்



ஈரோடு ஜூலை 24-

ஈரோடு நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியில் கணினி அறிவியல் மற்றும் பயன்பாட்டு கணினி துறைகள் இணைந்து பன்னாட்டுதரவு காட்சிப்படுத்தல் மற்றும் இயந்திர கற்றல்: தரவு அறிவியலில் நுண்ணறிவுகளைத் திறப்பதுஎன்னும் தலைப்பில் நடந்தது.

நவரசம் கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரியின் கணினி அறிவியல் துறையின் துறை தலைவர் ஜி பாலகிருஷ்ணன் வரவேற்றார் கல்லூரியின் தலைவர் டி கே தாமோதரன் தலைமை ஏற்றார் கல்லூரியின் பொருளாளர் சி. பழனிச்சாமி, செயலாளர் கு செந்தில் குமார். முதல்வர் டாக்டர் இரா கனிஎழில் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இவ்விழாவின் தொடக்க உரையாக ஓமன் நாட்டிலிருந்து வருகை புரிந்த கணினி மற்றும் தகவல் அறிவியல் கல்லூரியின் தகவல் தொழில்நுட்பத் துறையைச் சார்ந்த பேராசிரியர் டாக்டர் எஸ் ராஜசேகரன் 'Python ல் தரவு கையாளுதல், தரவு காட்சியாக்கம் மற்றும் இயந்திர கற்றல் நுட்பங்களை செயல்படுத்துதல்" என்னும் தலைப்பில் தரவுக் காட்சியாக்கம் பற்றியும் அதனால் ஏற்படும் பயன்கள் மற்றும் இக்காட்சியகத்தால் மனித இனத்திற்கு உண்டாகும் நன்மைகள் இயந்திர கற்றல் வகைப்பாடுகளான சிதறல் வரைபடம் பட்டை வரைபடம் பற்றியும் சிறப்பான முறையில் விளக்கக் காட்சி மென்பொருள் வழியாக கருத்தினை குறித்து பேசினார் .தொடர்ந்து கோவையைச் சார்ந்த செயற்கை நுண்ணறிவு ஆய்வாளர், தரவு அறிவியலாளர் மற்றும் பொதுச் செயற்கை நுண்ணறிவு ஆய்வாளர் எம் சுரேந்தர் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு "உள்ளிருந்து தாக்கத்தை ஏற்படுத்தும் தரவுத்தளமாக்களின் கலை மற்றும் அறிவியல்" என்னும் தலைப்பில் செயற்கை நுண்ணறிவு தரவு பயன்பாடு மற்றும் எதற்காக இப்பயன்பாடு தேவைப்படுகிறது என்பதை பற்றியும் பரிந்துரை அமைப்பு பற்றியும் தரவாட்சியகத்தின் இன்றைய முக்கியத்துவம் குறித்தும் தரவு காட்சியாக போக்குகள் மற்றும் வடிவமைப்புகள் பற்றிய தெளிவான அணுகுமுறைகளையும் சிறப்புற எடுத்துக் கூறி சிறப்புரை ஆற்றினார்.

இக்கருத்தரங்கில் L160 கல்லூரிகளைச் சார்ந்த பேராசிரியர்கள், ஆய்வாளர்கள், மாணவ மாணவிகள் மற்றும் நவரசம் கல்லூரியின் பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் கலந்து கொண்டு பயன்பெற்று சிறப்பித்தனர். நவரசம் கல்லூரியின் பயன்பாட்டு கணினி அறிவியல் துறையின் துறைத் தலைவர் முனைவர் எஸ் சப்னா நன்றிகூறினார்.

# குன்னூர், கோத்தகிரி நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் இன்று நடக்கிறது

## கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தகவல்

ஊட்டி,ஜூலை.24-

தமிழ்நாடு முதலமைச்சர் இந்த ஆண்டு சட்டமன்ற பேரவையில் மக்களின் குறைகளை நேரடியாக கேட்டறியும் பணிகள் துவக்கப்படும் என அறிவித்திருந்தார்.

முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பின்படி, தமிழ்நாட்டில் உள்ள அனைத்து நகர்ப்புற மற்றும் ஊரகப் பகுதிகளில்,'உங்களுடன் ஸ்டாலின்' என்ற திட்டம் துவக்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மொத்தம் 10,000 சிறப்பு முகாம்கள் நடத்தப்படவிருக்கிறது.

அந்தவகையில், நீலகிரி மாவட்டத்தில் முதற்கட்டமாக 'உங்களுடன் ஸ்டாலின் 'திட்டமுகாமானது கடந்த15.07.2025 முதல் உதகமண்டலம், கோத்தகிரி, குன்னூர் மற்றும் குந்தா ஆகிய வட்டங்களுக்குட்பட்ட நகராட்சிகள்,பேரூராட்சிகள் மற்றும் கிராம ஊராட்சிகள் வாரியாக நடைபெற்று வருகிறது. அதன்படி, 24.07.2025 அன்று குன்னூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 9, 10 மற்றும் 11-ற்கான முகாம் பெட்போர்டு, பாரதியார் மண்டபத்திலும், கோத்தகிரி நகராட்சிக்குட்பட்ட வார்டு 20 மற்றும் 21-ற்கான முகாம் நிவாரணமையம், காந்தி மைதானத்திலும், குன்னூர் வட்டம், எடப்பள்ளி ஊராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் இளித்தொரை சமுதாய கூடத்திலும், கோத்தகிரி வட்டம், கோடநாடு ஊராட்சி;க்குட்பட்ட பகுதிகளுக்கான முகாம் சுண்டட்டி சமுதாய கூடத்திலும் நடைபெறவுள்ளது. நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி பகுதிகளில் நடைபெறும் மேற்படி முகாம்களில் அனைத்து பகுதிகளையும் உள்ளடக்கி நடைபெறுவதால் தங்கள் பகுதிக்குச் சென்று ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள பகுதியில், அமைந்துள்ள முகாம்களில் மட்டும் கலந்துக் கொண்டு கோரிக்கை விண்ணப்பம் அளிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். எனவே, உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் தங்களது பகுதிகளில் நடைபெறும் முகாம்களில் பொதுமக்கள் அனைவரும் கலந்து கொண்டு பயன் பெறுமாறு கலெக்டர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

# அதிகரட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூ. 45 லட்சம் கடனுதவி



ஊட்டி, ஜூலை 24-

அதிகரட்டி பகுதியில் அமைந்துள்ளது அதிகரட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் கடன் வழங்கும் விழா நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கு நீலகிரி மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் இரா. தயாளன் தலைமை வகித்தார். இதில் மூன்று மகளிர் சுய உதவி குழுக்களுக்கு ரூபாய்- 45,00,000/-ம் கடனுதவி நீலகிரி மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளரால் வழங்கப்பட்டது. அப்போது அவர் பேசுகையில் மகளிர் அனைவரும் சிறு, குறு தனியார் நிதி நிறுவனங்களில் கடன் பெற்று கூட்டு வட்டி எனும் கொடுமையில் சிக்கி, தங்களது சுயமரியாதை மற்றும் உழைப்பை இழக்காமல் இருக்க வேண்டுமென்றால் கூட்டுறவு சங்கங்கள் வாயிலாக மட்டுமே கடன் பெற வேண்டும் எனவும் அவ்வாறு பெற்ற கடனை ஆக்கப்பூர்வமான வழிகளில் பயன்படுத்தி தங்களது பொருளாதார நலனை மேம்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் கூறினார். இந்நிகழ்ச்சியில் சங்கத்தின் செயலாளர் மணிகண்டன், மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி சரக மேற்பார்வையாளர்கள் முருகேசன், சங்க பணியாளர்கள் மற்றும் பயனாளிகள் கலந்து கொண்டனர்.

# நொச்சி நகர் செல்வ கணபதி திருக்கோயில் மகா கும்பாபிஷேக விழா



ஈரோடு ஜூலை 24-

ஈரோடு மாவட்டம் 46 புதூர் கிராமம் நொச்சி நகர் பகுதியில் அமைந்துள்ள ஸ்ரீ குமரன் கார்டன்சில் ஸ்ரீ செல்வ கணபதி திருக்கோயில் அமைந்துள்ளது இக்கோயிலில் மகா கும்பாபிஷேக திருவிழா நடைபெற்றது

முன்னதாக கடந்த வெள்ளிக்கிழமை காவிரி ஆற்றுககு சென்று தீர்த்தம் எடுத்து வரப்பட்டு சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றது

அதைத் தொடர்ந்து சனிக்கிழமை கணபதி ஹோமம் நவக்கிரகஹோமம் லட்சுமி ஹோமம் நடைபெற்றது நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை விநாயகர் வழிபாடு செய்யப்பட்டு ஸ்ரீ செல்வ கணபதிக்கு மகா கும்பாபிஷேகம் தொடர்ந்து மகா அபிஷேகம் நடைபெற்றது விழாவை ஒட்டி பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது விழாவில் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் சி சரஸ்வதி பைரவ பீடம் விஜய் சுவாமிகள் ஜி 46 புதூர் முன்னாள் தலைவர் ஆர் பிரகாஷ் ஈரோடு மாநகராட்சி 59-வது வார்டு உறுப்பினர் ஸ்ரீ சக்திவேல் முன்னாள் கவுன்சிலர் சிபி சக்ரவர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்

கும்பாபிஷேக ஏற்பாடுகளை விழா குழுவினர் டி விஜயேந்திரன் சி ராஜ்குமார் ஜி விஸ்வநாதன் எ மணிகண்டன் கே கார்த்திகேசன் மற்றும் ஊர் பொதுமக்கள் செய்திருந்தனர் .

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



சென்னை திருவிகநகர் 74வது வார்டு கிருஷ்ணதாஸ் பிரதானசாலையில் நடந்த உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மேயர் ஆர்.பிரியா, தாயகம் கவி எம்எல்ஏ, துணை ஆணையர் கவுசிக், மண்டல குழு தலைவர் சரிதா, மண்டல அலுவலர் சரவணன் உள்ளனர்.



சென்னை திருவொற்றியூர் மண்டலம்7 வது வட்டத்திற்கு உட்பட்ட ஆர்.எம். வீ. நகர் 3வது தெரு பொதுமக்களின் கோரிக்கையையேற்று அதிமுக மாமன்ற உறுப்பினர் டாக்டர் கே.கார்த்திக் தனது வார்டு மேம்பாட்டு நிதி ரூ. 6.80 லட்சம் நிதியிலிருந்து மழைநீர்வடிகால் அமைக்கும் பணிகளுக்கு பூஜைபோட்டு தொடங்கி வைத்தார் .அவருடன்வட்ட செயலாளர் எம்.கண்ணன், முன்னாள் வட்ட செயலாளர் எஸ்.ஸ்டீபன் உடன் இருந்தனர்.



சென்னை வளசரவாக்கம் நெற்குன்றத்தில் நடந்த உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேரில் பார்வையிட்டுஆய்வு செய்தார். இதில் காரம்பாக்கம் கணபதி எம்எல்ஏ, துணை ஆணையர் அதாப் ரசூல், மண்டல குழு தலைவர் நொளம்பூர் வெ.ராஜன், மாமன்ற உறுப்பினர் கிரிதரன், மண்டல அலுவலர் பானுகுமார் கலந்து கொண்டனர்.

# ஏல சீட்டு நடத்தி ரூ.4.11 லட்சம் மோசடி: பெண் கைது

**சென்னை ஜூலை 24-**

சென்னை, திருவல்லிகேணி, வெங்கடேசபுரம் 3-வது தெருவில் வசித்து வரும் சுமதி, என்பவர் பார்த்தசாரதி கோயில் அருகில் சாலையோரமாக வாழைப்பழ கடை வைத்து நடத்தி வருகிறார். புகார்தாரர் சுமதிக்கு நண்பர்கள் மூலம் அறிமுகமான ஏலச்சீட்டு நடத்தி வரும் சுமதி மற்றும் அவரது தம்பி மனோகரன் ஆகிய இருவரும், புகார்தாரர் சுமதியிடம் ஏலச்சீட்டில் சேர்ந்தால் பணத்தை சரியான நேரத்தில் கொடுத்து விடுவோம் என ஆசை வார்த்தை கூறி, நம்ப வைத்து ஏலச்சீட்டில் சேர்த்துள்ளனர். புகார்தாரர் 2019-ஆம் ஆண்டு ரூ.5 லட்சம் ஏலச்சீட்டில் சேர்ந்து, மாதந்தோறும் சீட்டு பணம் கட்டி வந்த நிலையில், 17 மாதம் முடிவில் பணம் ரூ.4,11,650 கட்டியுள்ளார். இந்நிலையில் புகார்தாரரின் மகள் திருமணச் செலவுக்காக பணம் வேண்டி சீட்டுப்பணத்தை சுமதி மற்றும் மனோகரனிடம் கேட்டுள்ளார். எதிரிகள் சீட்டுப் பணம் ரூ.4,11,650-ஐ கொடுக்காமல் சுமதியை இது வரை ஏமாற்றி வந்துள்ளனர். இது குறித்து சுமதி, ஐஸ் அவுஸ் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசரணை மேற்கொண்டர்.

ஜஸ் அவுஸ் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்ததில் சுமதி மற்றும் அவரது தம்பி மனோகரன் என்பவருடன் சேர்ந்து ஏலசீட்டு நடத்தி மோசடி செய்தது உண்மையென தெரியவந்ததின் பேரில் மேற்படி சீட்டு மோசடியில் ஈடுபட்ட சுமதி, என்பவரை கைது செய்தனர்.

மாண்பமை சார்பு நீதிமன்றம், பவானி
I.A.No. 4/2024 & I.A.No. 5/2024
& I.A.No. 6/2024
in O.S.No. 262/2019

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், அந்தியூர் கிராமம், கைக்கோளபாளையம், 46 பாலதட்டையில் வசிக்கும் நாச்சிமுத்து கவுண்டர் மகன் ராஜ்
...மனுதாரர்/வாதி

இடையே

ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், அந்தியூர் கிராமம், தவிட்டுப்பாளையம், 41, A.K.பழனியப்பா வீதியில் வசிக்கும் கருப்புசாமி மகன் முத்துசாமி மேற்படி முகவரியில் வசிக்கும் கருப்புசாமி மகன் காளியப்பன்
...எதிர்மனுதாரர்கள் / உத்தேசகட்சிக்காரர்

பொது அறிவிப்பு

மேற்படி மனுவின் மனுதாரர் தாக்கல் செய்துள்ள அ.வ.எண்.262/2019 வழக்கின் பிரதிவாதி இறந்துவிட்டதால் மேற்படியாரின் வாரிசுகளான உங்களை தரப்பினர்களாக சேர்க்ககோரி தாக்கல் செய்துள்ள மனு இ.ம.எண். 4/2024, இ.ம.எண். 5/2024, இ.ம.எண். 6/2024 ஆகிய எண்களில் சமூகம் மேற்படி நீதிமன்றத்தில் வருகின்ற **30.07.2025** ம் தேதியில் உங்களது ஆஜருக்காக வாய்தா போடப்பட்டு நிலுவையில் உள்ளது. மேற்படி தேதியில் எதிர்மனுதாரர்கள் ஆகிய நீங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராகி உங்களது ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது. தவறும்பட்சத்தில் மேற்படி மனுக்களில் உங்களுக்கு எதிராக உத்தரவு பிறப்பிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

/கோர்ட் உத்தரவுப்படி/

A.T.விஜய்,B.A.,B.L.,
வழக்கறிஞர், அந்தியூர்/பவானி.

**PUBLIC NOTICE**

My Clients, 1. Smt. JAYALAKSHMI, 2. Smt. UMAGOWRI, Daughter's of Late. Krishnan, states that they had Lost the Original Sale Deed executed on the 14/12/1983, bearing Document No. 935 of 1983, near the main bus stand, Udhagamandalam, The Nilgiris, when they came with the Document to take xerox Copy of the same. Anybody come across the same may kindly hand it over to the aforesaid address or to the Advocate.

Udhagamandalam
Y.B. BHEEMAN B.A.LL.B.,
Advocate / Notary Public,
Annadhani Nivas, Bank Lane,
Udhagamandalam, The Nilgiris

மழைநீர் உயிர்நீர்

## பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரரர் கீழே குறிப்பிட்டுள்ள திருப்பூர் மாவட்டம், தாராபுரம் தாலூகா, சேனாபதிபாளையம் கிராமத்தில் 07 ஏக்கர் 26 செண்டு உள்ள புஞ்சை நிலத்தினை கீழேகண்ட உரிமையாளர்களிடமிருந்து 29 ஆண்டுகள் மற்றும் 11 மாத காலத்திற்கு நீண்ட கால குத்தகை அடிப்படையில் பெற உத்தேசம் செய்யப்பட்டுள்ளது.

| வரிசை எண் | உரிமையாளர்கள் | கிராமம் | சர்வே எண்கள் | அளவு (ஏக்கரில்) |
|---|---|---|---|---|
| 1. | 1)பழனியம்மாள் க/பெ பெரியசாமி 2) தெய்வாணை க/பெ சின்னத்தம்பி 3) அம்மிணியம்மாள் க/பெ குப்புசாமி | சேனாபதி பாளையம் | 344 (பகுதி) | 2.95 |
| 2. | | | 345 (பகுதி) | 3.76 |
| 3. | | | 343/B (பகுதி) | 0.28 |
| 4. | | | 342 (பகுதி) | 0.27 |

மேலே குறிப்பிடப்பட்ட நபர்களை தவிர வேறு நபர்கள் மேற்படி புல எண்களில் உரிமை இருப்பதாக கருதினால் தகுந்த ஆதாரங்களுடன் இந்த அறிவிப்பு வெளியான நாளில் இருந்து 07 (ஏழு) தினங்களுக்குள் கீழே குறிப்பிடப்பட்ட வழக்கறிஞர்கள் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேற்படி காலக்கெடு முடிந்தபின்பு பெறப்படும் ஆதாரங்கள் யாவும் எக்காரணம் கொண்டும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. எனவும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள நபர்களிடமிருந்து/ உரிமையாளர்களிடமிருந்து மேற்படி சொத்தினை எனது கட்சிக்காரரர் குத்தகை ஆவணம் பதிவு செய்து கொள்வார் என இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

Mr.தீபக்சவுத்ரி/Mr.கௌசிக்பிரணவ்,
JSA, Advocates & Solicitors,
பிளாட்எண்.391B,சாலைஎண்.81,
பிலிம்நகர்,ஜூபிலிஹில்ஸ்,
ஹைதராபாத்– 500096, தெலங்கானா,இந்தியா.
Mob: 9885442266 & 8125506521.

சேலம் சிறப்பு 1வது சார்பு நீதிமன்றம் அவர்கள்
(மோட்டார் வாகன விபத்து தீர்ப்பாயம்)
**M.C.O.P.No. 2453/2024**

G.தனபால்
...மனுதாரர்

இடையே

1. கௌதம், த/பெ.வெங்கட்ராமன் க.எண்.13, எழில் நகர், ஒண்டிப்புதூர், கோயம்புத்தூர்-641016
2. HDFC ERGO ஜெனரல் இன்சூரன்ஸ் கோ.லிமிடெட், சேலம் - 636 004.

...1 ம் எதிர்மனுதாரர்

1 ம் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு

மேற்படி மனுதாரர் வாகன விபத்து வழக்கை 1 ம் எதிர்மனுதாரருக்கு எதிராக மனுதாரர் நஷ்டஈடு கோரி வழக்கை தாக்கல் செய்துள்ளார். மேற்படி வழக்கின் வாய்தா தேதியானது வருகின்ற **31.07.2025** ம் அன்று காலை 10.00 மணிக்கு 1 ம் எதிர்மனுதாரர் நேரில் ஆஜராகி ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாவோ ஆஜராகி தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறும் பட்சத்தில் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை கண்டிப்பாய் அறியவும்.

/கோர்ட் உத்தரவுப்படி/

K.R.நெடுமாறன்,M.A.,B.L.,
வழக்கறிஞர், சேலம்.

**தமிழ்நாடு அரசு**
**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை**
**ஊராட்சி ஒன்றியம், கூடலூர், நீலகிரி மவாட்டம் – 643 212**

அறிவிப்பு எண் ந.க.அ2.எண்.10811674 /2025 நாள்.21.07.2025
கீழ்க்கண்ட பணிகளுக்கு மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | பணியின் மதிப்பு | முன் வைப்பு தொகை % சதவீதம் |
|---|---|---|---|
| | 15–வது நிதிக்குழு மான்யம் ( துணை சுகாதார மையம் ) 2025–2026 | | |
| 1. | நெலாக்கோட்டை ஊராட்சியில் பாக்கனா பகுதியில் துணை சுகாதார மையம் கட்டுவதற்கு | 50.00 | 50000 |
| 2. | நெலாக்கோட்டை ஊராட்சியில் விலங்கூர் பகுதியில் துணை சுகாதார மையம் கட்டுவதற்கு | 50.00 | 50000 |
| 3. | மசினகுடி ஊராட்சியில் மாவனல்லா பகுதியில் துணை சுகாதார மையம் கட்டுவதற்கு | 50.00 | 50000 |

1) நிறைவு செய்யப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளான 30.07.2025 மாலை 3.00 மணிக்குள் https://tntenders.gov.in என்ற இணையதளத்தில் Digital Signature card-னை பயன்படுத்தி ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க வேண்டும்.

2) https://tntenders.gov.in வளைதளத்திலிருந்து பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகள் வருகை தரும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் 30.07.2025 அன்று மாலை 4.00 மணியளவில் கணினி மூலம் திறக்கப்படும்.

வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ),
ஊராட்சி ஒன்றியம், கூடலூர்.

# வேப்பேரி போலீஸ் கமிஷ்னர் அலுவலகத்தில் மக்கள் குறை தீர்வு முகாம்



**சென்னை ஜூலை 24-**

சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண் காவல் ஆணையரகத்தில் நடைபெற்ற பொதுமக்கள் குறை தீர்வு முகாமில் பொதுமக்களின் 21 புகார் மனுக்களை பெற்று விரைந்து நடவடிக்கை எடுக்க காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், சென்னை பெருநகர காவல் ஆணையரகத்தில் நடைபெற்று வரும் பொதுமக்கள் குறை தீர் முகாமில், காவல் அதிகாரிகள் பொதுமக்களின் புகார் மனுக்களை பெற்று விரைந்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டு, உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. சென்னை பெருநகர காவல் ஆணையாளர் ஆ.அருண், நேற்று காவல் ஆணையரகத்தில் புகார் மனு கொடுக்க வந்த பொதுமக்களிடம் இருந்து 21 புகார் மனுக்களை பெற்று, விரைந்து விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட காவல் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இம்முகாமின் போது துணை ஆணையர் ஜி.சுப்புலட்சுமி, மற்றும் பலர் உள்ளனர்.

# மெட்ரோ ரயில் கட்டுமான பணிக்காக வைத்திருந்த இரும்பு பொருட்களை திருடிய 4 பேர் கைது

**சென்னை ஜூலை 24-**

சென்னை, முகலிவாக்கம் பகுதியில் வசித்து வரும் திருமலைகுமார், என்பவர் தனியார் நிறுவனம் மூலம் நந்தம்பாக்கம் பகுதியில் நடைபெற்று வரும் மெட்ரோ இரயில் கட்டுமான பணி நடைபெறும் இடத்தில்ஐ.ஆர். அட்மீன் -ஆக வேலை செய்து வருகிறார். மேற்கண்ட இடத்தில் கட்டுமான பணிக்காக வைத்திருந்த சுமார் 500 கிலோ கிராம் இரும்பு பொருட்கள் திருடு போயிருப்பதாக திருமலைகுமார் நந்தம்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவில் கொடுத்த புகாரின்பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். நந்தம்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் சம்பவ இடத்தில் தீவிர விசாரணை செய்தும், சிசிடிவி கேமரா பதிவுகளை தீவிரமாக ஆய்வு செய்தும், மேற்படி இரும்பு பொருட்களை திருடிய எதிரிகள் 1.முருகன், 2.மனோஜ்குமார் யாதவ், 3.பரத்குமார் ராய், 4.தர்மேந்திர பிரசாத், ஆகிய நான்கு பேரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து மேற்படி இடத்திலிருந்து திருடிய சுமார் 500 கிலோ எடை கொண்ட இரும்பு பொருட்கள் மீட்கப்பட்டது.கைது செய்யப்பட்ட 4 எதிரிகளும் விசாரணைக்குப் பின்னர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டனர்.

# குடும்ப தகராறில் மனைவி கொலை வழக்கில் கணவர் கைது

**சென்னை ஜூலை 24-**

செங்கல்பட்டு மாவட்டத்தைச்சேர்ந்த முருகன், என்பவர் துரைப்பாக்கம் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் தனது மகள் லட்சுமிஎன்பவர் திருமணமாகி கணவர் மற்றும் 2 குழந்தைகளுடன் பெருங்குடி குப்பை மேடு, கார்பரேஷன் சாலை ஓரத்தில் தற்காலிகமாக கூடாரம் அமைத்து, குப்பைகளை பொறுக்கி விற்பனை செய்து வந்தார் எனவும், அவரை நேற்று காலை முதல் காணவில்லை எனவே அவரை கண்டுப்பிடித்து உரிய நடவடிக்கை எடுக்குமாறு கூறியிருந்தார்.

அதன்பேரில் துரைப்பாக்கம் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்து போலீசார் விசாரணை மேற்கொண்டனர்.

### விசாரணை

துரைப்பாக்கம் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்ததில், லட்சுமி அடிக்கடி செல்போனில் பேசி வந்ததை அவரது கணவர் நவீன் கண்டித்து வந்துள்ளார். இந்நிலையில் பெருங்குடி, குப்பைமேடு, தற்காலிக கூடாரம் அருகில் இருந்த போது லட்சுமிக்கு ஒரு போன் வந்துள்ளது, உடனே நவீன் போனை பிடுங்க முயன்ற போது, லட்சுமி எதிர்த்து பேசியுள்ளார். இதனால் ஆத்திரமடைந்த நவீன் மனைவியை கையால் ஓங்கி அடித்த போது கீழே விழுந்தவர் இறந்து விட்டார்.

உடனே நவீன், மனைவி லட்சுமி உடலை கூடாரம் அருகே உள்ள காலி இடத்தில் புதைத்து வைத்தது தெரியவந்தது. அதன் பேரில் மேற்படி வழக்கு கொலை வழக்காக மாற்றம் செய்யப்பட்டு எதிரி நவீன், என்பவரை கைது செய்தனர்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
C3, Private industrial Estate, sidco industrial Estate,sidco po
Coimbatore-641 021
Phone: 0422-2410092
E-Mail: coimbatoreedi@thinaboomi.com
RNI.Regn No.61508/94
Editor:S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

# ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு அழகுக்கலை மற்றும் சிகை அலங்கார பயிற்சி

## தாட்கோ மேலாண்மை இயக்குநர் தகவல்

**சென்னை ஜூலை 24-**

தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ) மற்றும் தனியார் நிறுவனத்துடன் இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு அழகுக்கலை மற்றும் சிகை அலங்காரம் பயிற்சி வழங்கப்படவுள்ளது என தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி தெரிவித்துள்ளார்

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பாதாவது:-தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக்கழகம் (தாட்கோ) மூலமாக ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தை சார்ந்த இளைஞர்களுக்கு பல்வேறு திறன் அடிப்படையிலான பயிற்சி திட்டங்களை வழங்கப்பட்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக தற்போது தாட்கோ மற்றும் தனியார் நிறுவனத்துடன் இணைந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இளைஞர்களுக்கு அழகுக்கலை மற்றும் சிகை அலங்கார பயிற்சி வழங்கப்படவுள்ளது. இப்பயிற்சியினை பெற ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின இனத்தை சார்ந்த எட்டாம் வகுப்பு முதல் பனிரெண்டாம் வகுப்பு வரை படித்தவராக இருக்க வேண்டும். 18 முதல் 35 வயது வரை உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். குடும்ப வருமானம் ஆண்டிற்கு ரூ.3. லட்சத்திற்குள் இருக்க வேண்டும். இப்பயிற்சிக்கான கால அளவு 45 நாட்கள் ஆகும். மேலும் சென்னையில் தங்கி படிக்கும் வசதியும் இப்பயிற்சியினை முழுமையாக முடிக்கும் இளைஞர்களுக்கு இந்திய தேசிய திறன் மேம்பாட்டு நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட தரச்சான்றிதழ் வழங்கப்படும். இப்பயிற்சியினை வெற்றிகரமாக முடிக்கும் இளைஞர்களுக்கு தனியார் அழகு நிலையங்களில் பணி புரிய வேலை வாய்ப்பு வழங்கி ஆரம்ப கால மாத சம்பளமாக ரூ.10,000/- முதல் ரூ.20,000/- வரை பெறலாம்

இப்பயிற்சியினை பெற தாட்கோ இணையதளமான (www.tahdco.com) என்ற முகவரியில் விண்ணப்பிக்கலாம். தங்கும் விடுதி, உணவு உட்பட செலவினம் தாட்கோ மூலமாக வழங்கப்படும் என தாட்கோ மேலாண்மை இயக்குநர் க.சு.கந்தசாமி தெரிவித்துள்ளார்கள்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

தமிழ்நாடு அரசு
**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**
**மேச்சேரி ஊராட்சி ஒன்றியம்**

**குறுகிய கால மறு மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு**
**National Health Mission (தேசிய சுகாதார இயக்கம்) மற்றும்**
**15-வது மத்திய நிதிக்குழு மான்யம் (சுகாதாரம்) 2025-2026ஆம் ஆண்டு**

ந.க.எண்.1619/2025/அ2 தேதி: 23.07.2025

1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. மேச்சேரி ஊராட்சி ஒன்றியம் வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ) அவர்களால் **National Health Mission (தேசிய சுகாதார இயக்கம்) மற்றும் 15-வது மத்திய நிதிக்குழு மான்யம் (சுகாதாரம்) 2025-2026ஆம் ஆண்டு திட்டத்தின்கீழ் பணிகள்** மேற்கொள்ளுதல் பணிகளுக்கு மின் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகிறது.

| பணியின் பெயர்: குட்டப்பட்டி ஆரம்ப சுகாதார நிலையத்திற்கு கூடுதல் கட்டடம் (Additional PHC) அமைத்தல் | |
|---|---|
| ஊராட்சியின் பெயர்: குட்டப்பட்டி | மதிப்பீடு (ரூபாயில்): 78,20,000 |

3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக **24.07.2025 முதல் 31.07.2025** வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. ஒப்பந்த ஆவணங்களை பதிவிறக்கம் செய்து சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்: அ) மின் ஒப்பந்த படிவம் பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்க வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம்: **31.07.2025 மாலை 3.00 மணி வரை.** ஆ) மின் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் **: 31.07.2025 மாலை 4.00 மணி**
5. வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ)-ன் முடிவு இறுதியானது.

செ.ம.தொ.இ / 3780 / ஒப்பந்தப்புள்ளி / 2025 — **வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ), மேச்சேரி**

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
**கட்டட (க&பரா) வட்டம், மதுரை-625002**
**விலை விகித முறை**

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.20க.பொ/க (க & ப) வட்டம், மதுரை / 2025–2026 / நாள்.22.07.2025.**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட (க & ப) வட்டம், மதுரை அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள சிவில் ஒப்பந்தகாரர்களிடமிருந்து 11 (பதினோரு) பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

1. பதினோரு பணிகளுக்கான விபரம், ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களுக்கு https://tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை அணுகவும்.

| வ. எண். | வேலைகள் | ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் கிடைக்கும் காலம் | சமர்ப்பிக்கும் கடைசி நாள் மற்றும் நேரம் | திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| 1. | வ.எண்.1 முதல் 6 முடிய | 30.07.2025 முதல் 13.08.2025 வரை | 13.08.2025 மாலை 3.00 வரை | 13.08.2025 மாலை 4.00 மணி முதல் |
| 2 | வ.எண்.7 முதல் 11 முடிய | 31.07.2025 முதல் 14.08.2025 வரை | 14.08.2025 மாலை 3.00 வரை | 14.08.2025 மாலை 4.00 மணி முதல் |

2. ஒப்பந்ததாரர் பணித்தளத்தினை பார்வையிட்ட சான்றிதழ் பெறுவதற்கு விண்ணப்பிக்க வேண்டிய கடைசி நாள்: வ.எண்.1 முதல் 6 வரையிலான பணிகளுக்கு **07.08.2025 மற்றும் வ.எண். 7 முதல் 11 வரையிலான பணிகளுக்கு 08.08.2025.**
3. செயற்பொறியாளர்களிடமிருந்து பணித்தளத்தினை பார்வையிட்ட சான்றிதழ் பெறுவதற்கான கடைசி நாள் : வ.எண்.1 முதல் 6 வரையிலான பணிகளுக்கு **12.08.2025 மற்றும் வ.எண். 7 முதல் 11 வரையிலான பணிகளுக்கு 13.08.2025.**

**கண்காணிப்புப் பொறியாளர், பொபது.,**
**கட்டட (க&பரா) வட்டம், மதுரை**

செ.ம.தொ.இ/3749/ஒப்பந்தப்புள்ளி/2025

**தமிழ்நாடு அரசு – பொதுப்பணித்துறை**
**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு எண். 23/2025–2026/க(க&ப)வ–1/சென்னை/ நாள் : 22.07.2025**
**ஒப்பந்தம்–Lumpsum (இணையதள வழியில் மட்டும்)**

தமிழ்நாடு ஆளுநரின் சார்பாக, கண்காணிப்புப் பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்–1, சேப்பாக்கம், சென்னை–5 அவர்களால் கீழ்க்காணும் பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பொதுப்பணித்துறையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களிடமிருந்து அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி பெற்றுக் கொள்ளப்படும்.

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு லட்சங்களில் | முன்வைப்புத் தொகை (ரூபாயில்) மற்றும் பணி முடிக்க வேண்டிய காலம் | தகுதி பெற்ற பதிவு செய்த ஒப்பந்தக்காரர்கள் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| | ஒரு உறை முறை | | | |
| 1. | அம்பத்தூரில் உள்ள அரசு மகளிர் தொழிற் பயிற்சி நிலையத்தின் பிரதான கட்டிடம் மற்றும் கோபா கட்டிடத்திற்கு சாலை வசதிகள் மற்றும் அடிப்படை வசதிகள் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் செய்யும் பணி. | ரூ. 128.30 இலட்சங்கள் | ரூ.75,000/– 3 (மூன்று) மாதங்கள் | பொதுப்பணித்துறையில் பதிவு பெற்ற வகுப்பு –4 மற்றும் அதற்கு மேல் (திருத்திய வகுப்பின்படி) |

**குறிப்பு:–** 1. ஒப்பந்தப்புள்ளி குறித்த தகவல்கள் மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவங்கள் கீழ்க்காணும் இணையதளத்தின் மூலம் இலவசமாகப் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். http://tntenders.gov.in. 2. பணித்தள ஆய்வு சான்று உரிய செயற்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பிக்க கடைசி நாள். 08.08.2025. 3. இணையதளம் வாயிலாக நிறைவு செய்யப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்படுவதற்கான கடைசி நாளும், நேரமும் 12.08.2025 மாலை 3.00 மணி வரை. 4. பெறப்பட்ட மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாளும், நேரமும் 12.08.2025 மாலை 4.00 மணி. 5. ஒப்பந்தப்புள்ளி அறிவிக்கை மற்றும் ஒப்பந்தத்தில் ஏதேனும் மாற்றங்கள் / திருத்தங்கள் இருப்பின் http://tntenders.gov.in இணையதளத்தில் மட்டுமே தெரிவிக்கப்படும்.

**கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து..,**
**கட்டட கட்டுமான (ம) பராமரிப்பு வட்டம்–1, சேப்பாக்கம், சென்னை–5.**

செ.ம.தொ.இ./ 3744 /ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
**கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், கோயம்புத்தூர்**

**மொத்த தொகை (இனவிலை முறை)**

**மின்னணு முறை மறு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.22/BCM/ CBE/ 2025–26/ நாள். 22.07.2025**

தமிழக ஆளுநருக்காகவும் அவரது சார்பாகவும், தமிழ்நாடு அரசின் மின்னணு கொள்முதல் வலைதளம் மூலமாக ஒப்பந்தப்புள்ளி கண்காணிப்புப்பொறியாளர், பொபது., கட்டட கட்டுமானம் மற்றும் பராமரிப்பு வட்டம், கோயம்புத்தூர் அவர்களால்;

**திருப்பூர் மாவட்டம், தாராபுரம் அரசு மருத்துவமனையில் கூடுதல் கட்டிடத்திற்கு கூடுதல் மின் பணிகள் வழங்கும் பணி. (இரண்டாம் அழைப்பு)**

மேற்காணும் பணிக்கு பொதுப்பணித்துறையில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து, ஒப்பந்தப்புள்ளி இணையவழி முறையில் பெறப்பட்டு, இனவிலை முறை ஒப்பந்தப்புள்ளி அரசு மின்னணு கொள்முதல் வலைத்தளத்தில் (e–procurement portal of Government of Tamil Nadu) 12.08.2025 பிற்பகல் 03.00 மணி வரை பதிவேற்றம் பெற்று அன்றே பிற்பகல் 03.30 மணி முதல் திறக்கப்படும்.

இதர விவரங்களை https://tntenders.gov.in [illegible]

கண்காணிப்புப்பொறியாளர், பொபது., கட்டட கட்டுமானம் & பராமரிப்பு வட்டம், கோயம்புத்தூர்.

செ.ம.தொ.இ/3734/ஒப்பந்தப்புள்ளி/ 2025

தமிழ்நாடு அரசு
**பொதுப்பணித்துறை**
கட்டட (கட்டுமானம் மற்றும் பராமரிப்பு) வட்ட அலுவலகம், சேலம் - 7
மின்னணு ஒப்பந்தப்புள்ளி திருத்த அறிவிப்பு
மொத்த தொகை ஒப்பந்த முறை

[illegible]

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்: 21/2025–2026/க.பொ(க&ப) வட்டம் / சேலம் / நாள்: 15.07.2025**

| | முன் அறிவிக்கப்பட்டது | தற்போது திருத்தப்பட்டுவது |
|---|---|---|
| மின்னணு ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் கிடைக்கும் காலம் | 22.07.2025 பிற்பகல் 3.00 மணி முதல் 07.08.2025 பிற்பகல் 3.00 மணி வரை | 29.07.2025 பிற்பகல் 3.00 மணி முதல் 13.08.2025 பிற்பகல் 3.00 மணி வரை |
| மின்னணு ஒப்பந்தப்புள்ளி பெற கடைசி நாள் மற்றும் நேரம் | 07.08.2025 பிற்பகல் 3.00 மணி வரை | 13.08.2025 பிற்பகல் 3.00 மணி வரை |
| மின்னணு ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் | 07.08.2025 பிற்பகல் 3.30 மணிக்கு | 13.08.2025 பிற்பகல் 3.30 மணிக்கு |

இதர நிபந்தனைகளில் மாற்றம் ஏதுமில்லை.

கண்காணிப்புப் பொறியாளர், பொ.ப.து., கட்டட (க&ப) வட்டம், சேலம்–7.

செ.ம.தொ.இ/3722/ஒப்பந்தப்புள்ளி/2025

### இங்கிலாந்தில் 1,000 ரன்களை கடந்த

# இந்திய வீரர்கள் பட்டியலில் இணைந்தார் கே.எல்.ராகுல்



**லண்டன், ஜூலை 24-**

இந்தியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 4-வது டெஸ்ட் போட்டியின் முதல்நாளான நேற்று கே.எல்.ராகுல் 59 பந்தில் 32 ரன்கள் எடுத்திருந்த நிலையில் இங்கிலாந்து மண்ணில் 1000 ரன்களை கடந்த இந்திய வீரர்களின் பட்டியலில் அவர் இணைந்தார்.

**4-வது டெஸ்ட்....**


இந்தியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 4-வது டெஸ்ட் மான்செஸ்டர் ஓல்டு டிராஃபோர்டில் நேற்று தொடங்கியது. டாஸ் வென்ற இங்கிலாந்து பந்து வீச்சை தேர்வு செய்தது. அதன்படி இந்திய அணியின் ஜெய்ஸ்வால் மற்றும் கே.எல். ராகுல் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர்.

**ஆயிரம் ரன்களை...**

ஜெய்ஸ்வால் சற்று தடுமாற, கே.எல். ராகுல் நேர்த்தியாக விளையாடினார். 18 ஓவர் வரை இருவரும் விக்கெட் இழக்காமல் விளையாடி வருகின்றனர். கே.எல். ராகுல் 59 பந்தில் 32 ரன்கள் எடுத்து விளையாடி வருகிறது. இதன் மூலம் இங்கிலாந்து மண்ணில் நடைபெறும் டெஸ்டில் ஆயிரம் ரன்களை கடந்துள்ளார். இதற்கு முன்னதாக இந்திய வீரர்களான சச்சின் தெண்டுல்கர், ராகுல் டிராவிட், சுனில் கவாஸ்கர், விராட் கோலி ஆகியோர் 1000 ரன்களை கடந்துள்ளனர். தற்போது அவர்கள் பட்டியலில் கே.எல். ராகுல் இணைந்துள்ளார்.

### சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு:

# ரஸலுக்கு சக வீரர்கள் கவுரவம்



**கிங்ஸ்டன், ஜூலை 24-**

ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டி20 போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ரஸல் ஓய்வு பெற்றார். இப்போட்டியில் அதிரடியாக விளையாடிய ரஸல் 15 பந்துகளில் 36 ரன்கள் அடித்தார்.

**1078 ரன்கள் குவிப்பு...**

வெஸ்ட் இண்டீஸ் அணியின் அதிரடி பேட்ஸ்மேன் அந்த்ரே ரஸல். 37 வயதான இவர், ரஸல் 2019ஆம் ஆண்டில் இருந்து வெஸ்ட் இண்டீஸ் அணிக்காக டி20 கிரிக்கெட்டில் மட்டுமே விளையாடி வருகிறார். இதுவரை 84 போட்டிகளில் விளையாடி 1078 ரன்கள் அடித்துள்ளார். 61 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். ரஸல் அவருடைய சொந்த ஊரான ஜமைக்காவில் நேற்று நடைபெற்ற ஆஸ்திரேலியாவுக்கு எதிரான டி20 போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றார்.

**அணிக்கு பின்னடைவு...**

தனது கடைசி சர்வதேச போட்டியில் களமிறங்கிய ரஸலுக்கு வேஸ்ட் இண்டீஸ் மற்றும் ஆஸ்திரேலிய வீரர்கள் கார்ட் ஆப் கானர் அளித்து கௌரவித்தனர். இப்போட்டியில் அதிரடியாக விளையாடிய ரஸல் 15 பந்துகளில் 36 ரன்கள் அடித்தார். இந்தியா மற்றும் இலங்கையில் அடுத்த ஆண்டு பிப்ரவரி மாதம் டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் தொடர் நடைபெற இருக்கும் நிலையில், ரஸல் ஓய்வு வெஸ்ட் இண்டீஸ் அணிக்கு பாதிப்பை ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது.

**56 ஒருநாள் போட்டிகள்...**

முன்னதாக அதிரடி வீரர் நிக்கோலஸ் பூரன் தனது 29 வயதிலேயே ஓய்வை முடிவை அறிவித்தார் என்பது குறிப்பிடத்தக்கது. ரஸல் வெஸ்ட் இண்டீஸ் அணிக்காக ஒரேயொரு டெஸ்ட் போட்டியில் மட்டும் விளையாடியுள்ளார். 56 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 1034 ரன்கள் அடித்துள்ளார். 70 விக்கெட்டுகள் வீழ்த்தியுள்ளார். அடுத்த தலைமுறை கரீபியன் கிரிக்கெட்டர்களுக்கு ரோல் மாடலாக இருக்கும் வகையில், எனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கையை உயரிய நிலையில் முடிக்க விரும்புகிறேன் என ரஸல் தெரிவித்துள்ளார்.

# பல சாதனைகள் படைத்த ஹர்மன்ப்ரீத்

**லண்டன், ஜூலை 24-**

இந்திய மகளிரணி கேப்டன் ஹர்மன்ப்ரீத் கௌர் ஒரே போட்டியில் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளார்.

**வரலாற்றுச் சாதனை...**

இங்கிலாந்து மகளிருக்கு எதிராக இந்திய அணி 13 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று 2-1 என்ற கணக்கில் தொடரைக் கைப்பற்றி வரலாற்றுச் சாதனை படைத்துள்ளது. இங்கிலாந்துக்கு எதிராக டி20 தொடரையும் வென்று சாதனை படைத்திருந்த நிலையில் ஒருநாள் தொடரையும் வென்று அசத்தினார்கள். இந்தப் போட்டியில் சதம் விளாசிய இந்திய அணி கேப்டன் ஹர்மன்ப்ரீத் கௌர் ஆட்டநாயகி விருதை வென்றார்.



**இதுவே முதல்முறை...**

இந்த விருதை 6 விக்கெட்டுகளை வீழ்த்திய இளம் வீராங்கனை கிராந்தி காட்டுடன் பகிர்ந்து கொண்டது நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இங்கிலாந்தில் ஒரு வெளிநாட்டு வீராங்கனை 3 சதங்கள் அடித்தது இதுவே முதல்முறை. இந்தச் சாதனைக்கு சொந்தக்காரியாக நமது மகளிரணி கேப்டன் ஹர்மன்ப்ரீத் கௌரையே சேரும் என்பது குறிப்பிடத்தக்கது.

**3-வது இந்தியர்....**

ஹர்மன்ப்ரீத் கௌர் ஒரு நாள் போட்டிகளில் 4,000 ரன்களை கடந்து அசத்தியுள்ளார். இவருக்கு முன்பாக மிதாலி ராஜ் 7,805 ரன்கள், ஸ்மிருதி மந்தனா 4,588 ரன்களும் எடுத்துள்ளார்கள்.

**எனது தந்தைக்கு...**

இந்தப் போட்டிக்குப் பிறகு ஹர்மன்ப்ரீத் கௌர் பேசியதாவது: அணியினர் அனைவருக்குமே இது நல்ல தருணங்களாக இருக்கிறது. இந்தத் தொடர் முழுவதும் விளையாடிய விதம் மகிழ்ச்சி அளிக்கிறது. ஃபீல்டிங்கில் சிறப்பாக செயல்பட்டோம். டபிள்யூபிஎல் தொடரில் பெற்ற அனுபவம் கிராந்தி, ஸ்ரீ சரணிக்கு உதவின. மேலும், ஃபீல்டிங் பயிற்சியாளருக்கும் இந்த வெற்றியில் பங்கு இருக்கிறது. இந்த வெற்றி எங்கள் அனைவருக்குமே முக்கியமானது. இந்த சிறப்பான ஆட்டத்தை நான் எனது தந்தைக்குச் சமர்ப்பிக்கிறேன். அவர் இந்த மாதிரியான ஆட்டத்துக்காக காத்திருந்தார். கடினமாக உழைத்தது சரியான நேரத்தில் கைகொடுத்தது. முதலில் சிறிது அழுத்தம் இருந்தது. தீப்தி முக்கியமான நேரத்தில் விக்கெட் எடுப்பார். உலகக் கோப்பைக்கு இந்தப் போட்டிகள் மிகவும் உதவுகின்றன என்றார்.

# முதல்வர் வீடு திரும்புவது எப்போது? மு.க.அழகிரி பதில்

**சென்னை, ஜூலை 24-**

முதல்வர் நலமுடன் உள்ளார். இன்னும் 2, 3 நாட்களில் அவர் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்புவார் என்று மு.க.அழகிரி தெரிவித்துள்ளார்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் லேசான தலைசுற்றல் காரணமாக அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார். மருத்துவர்களின் அறிவுறுத்தலின் பேரில் சில மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு மருத்துவமனையில் ஓய்வெடுத்து வருகிறார்.

மு.க.ஸ்டாலின் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட தகவலை அறிந்ததும் மு.க.அழகிரி மருத்துவமனைக்கு வந்து சகோதரரை சந்தித்து நலம் விசாரித்தார். இந்த நிலையில், நேற்று 2-வது நாளாக மருத்துவமனைக்கு வந்த மு.க.அழகிரி, மு.க.ஸ்டாலினை சந்தித்து நலம் விசாரித்தார். இதையடுத்து செய்தியாளர்களிடம் மு.க.அழகிரி கூறுகையில், முதல்வர் நலமுடன் உள்ளார். இன்னும் 2, 3 நாட்களில் மருத்துவமனையில் இருந்து வீடு திரும்புவார் என்றார்.

### இந்தியா - பாக். போரை நிறுத்தியதாக

# அமெரிக்க அதிபர் ட்ரம்ப் பலமுறை கூறியது குறித்து ராகுல்காந்தி கேள்வி

**புதுடெல்லி, ஜூலை 24-**

பரபரப்பான அரசியல் சூழலில் பாராளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் ஜூலை 21 ஆம் தேதி தொடங்கியது. பாராளுமன்ற மழைக்கால கூட்டத் தொடர் தொடங்கியதில் இருந்து எதிர்க்கட்சிகள் தொடர்ந்து கூச்சலிட்டு அமளியில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் பாராளுமன்ற நடவடிக்கைகள் முடங்கின. இதனிடையே துணை குடியரசு தலைவர் ஜெகதீப் தன்கர் பதவி விலகியது பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், 3 ஆம் நாளாக நேற்றும் பாராளுமன்ற நடவடிக்கைகள் முடங்கின. எதிர்க்கட்சிகளின் கடும் அமளியால் மக்களவை நண்பகல் 12 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. இதனையடுத்து பாராளுமன்ற வளாகத்தில் செய்தியாளர்களிடம் பேசிய ராகுல் காந்தி இந்தியா - பாகிஸ்தான் போரை நிறுத்திய அமெரிக்க அதிபர் டிரம்ப் ஏன் பலமுறை கூறினார் என்று கேள்வி எழுப்பினார்.

முன்னதாக மாநிலங்களவையில் பேசிய கார்கே, "அமெரிக்க அதிபர் டிரம்ப் தனது தலையீட்டால் மட்டுமே இந்தியா-பாகிஸ்தான் இடையே போர் நிறுத்தம் ஏற்பட்டதாக 24 முறை கூறியுள்ளார். அவர் மீண்டும் மீண்டும் கூறுவது நம் நாட்டுக்கு அவமானகரமானது" என்று தெரிவித்திருந்தார்.

## தொடரை வென்றது இந்தியா

இந்தியா-இங்கிலாந்து மகளிர் அணிகள் மோதிய 3-வது மற்றும் கடைசி ஒருநாள் போட்டி செஸ்டர் லீ ஸ்ட்ரீட் மைதானத்தில் பகல்-இரவு ஆட்டமாக நடைபெற்றது. முதலில் விளையாடிய இந்திய அணி 50 ஓவரில் 5 விக்கெட் இழப்புக்கு 318 ரன் குவித்தது. கேப்டன் ஹர்மன்பிரீத் கவூர் சதம் அடித்தார். அவரது 7-வது (149-வது போட்டி) செஞ்சூரியாகும். அவர் 84 பந்தில் 102 ரன்னும் (14 பவுண்டரி), ஜெமீமா ரோட்ரிக்ஸ் 45 பந்தில் 50 ரன்னும் (7 பவுண்டரி), ஸ்மிருதி மந் தனா, ஹர்லீன் தியோல் தலா 45 ரன்னும் எடுத்தனர்.

பின்னர் ஆடிய இங்கிலாந்து 49.5 ஓவரில் 305 ரன் எடுத்து ஆல் அவுட் ஆனது. இதனால் பரபரப்பான இந்த ஆட்டத்தில் இந்தியா 13 ரன் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. இந்த வெற்றி மூலம் 3 போட்டி கொண்ட ஒருநாள் தொடரை இந்தியா 2-1 என்ற கணக்கில் கைப்பற்றியது. முதல் ஆட்டத்தில் 4 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்று இருந்தது. 2-வது போட்டியில் இங்கிலாந்து 8 விக்கெட் வித்தியாசத்தில் வென்று இருந்தது. இங்கிலாந்தில் இந்திய அணி 2-வது முறையாக ஒருநாள் தொடரை கைப்பற்றி சாதித்தது. இதற்கு முன்பு 2022-ம் ஆண்டு 3-0 என்ற கணக்கில் ஒருநாள் தொடரை வென்று இருந்தது.

## முதல் சுற்றில் பி.வி.சிந்து வெற்றி

சீன ஓபன் பேட்மிண்டன் போட்டி சீனாவின் சாங்சோ நகரில் தொடங்கியது. இந்தத் தொடரில் இந்தியாவின் முன்னணி வீரர், வீராங்கனைகள் களம் காண்கின்றனர். இந்நிலையில், பெண்கள் ஒற்றையர் பிரிவில் இந்தியாவின் பி.வி.சிந்து, ஜப்பானின் டொமோகா மியாசகி உடன் மோதினார். இதில் முதல் செட்டை 21-15 என பி.வி.சிந்து கைப்பற்றினார். இதற்கு பதிலடியாக ஆடிய ஜப்பான் வீராங்கனை 21-8 என 2வது செட்டை வென்றார். வெற்றியாளரை நிர்ணயிக்கும் மூன்றாவது செட்டை 21-17 என பி.வி.சிந்து வென்று இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார்.

## லாய்டு, பரூக் பெயரில் ஸ்டேண்ட்

இந்தியா- இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான 4ஆவது டெஸ்ட் மான்செஸ்டர் ஓல்டு டிராஃபோர்டில் நேற்று தொடங்கியது. டாஸ் வென்ற இங்கிலாந்து பந்து வீச்சை தேர்வு செய்தது. இந்த போட்டி தொடங்குவதற்கு முன்னதாக, ரசிகர்கள் அமர்ந்து போட்டியை பார்வையிடும் கேலரியின் ஒரு பகுதிக்கு (Stand) பரூக் இன்ஜீனியர், கிளைவ் லாய்டு எனப் பெயரிடப்பட்டிருந்தது. அதை இருவரும் திறந்து வைத்தனர். மேலும், மணி அடித்து போட்டியை தொடங்கி வைத்தனர். பரூக் இன்ஜினீயர் இந்தியாவின் முன்னாள் வீரர் ஆவார். இவர் இந்திய அணிக்கான 46 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 2 சதம், 16 அரைசதங்களுடன் 2611 ரன்கள் அடித்துள்ளார். சராசரி 31.08 ஆகும். 121 அதிகபட்ச ஸ்கோராகும்.

கிளைவ் லாய்டு வெஸ்ட் இண்டீஸ் அணியின் முன்னாள் நட்சத்திர வீரர் ஆவார். இவர் 110 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 19 சதம், 39 அரைசதங்களுடன் 7515 ரன்கள் அடித்துள்ளார். சராசரி 46.67 ஆகும். அதிகபட்சமாக ஆட்டமிழக்காமல் 242 ரன்கள் அடித்துள்ளார். 87 ஒருநாள் போட்டியில் ஒரு சதம், 11 அரைசதங்களுடன் 1977 ரன்கள் அடித்துள்ளார். சராசரி 39.54 ஆகும். அதிகபட்ச ஸ்கோர் 102 ஆகும். டெஸ்ட் போட்டியில் 10 விக்கெட்டும், ஒருநாள் போட்டியில் 8 விக்கெட்டும் வீழ்த்தியுள்ளார்.

## ஆஸி.க்கு 2-வது வெற்றி

மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய அணி, 3 டெஸ்ட் மற்றும் 5 டி20 போட்டிகளில் விளையாடி வருகிறது. 3 டெஸ்ட் போட்டி தொடரை முழுமையாக வென்ற ஆஸ்திரேலிய அணி டி20 முதல் போட்டியில் வெற்றி பெற்றது. இந்த நிலையில், இவ்விரு அணிகள் மோதிய 2 வது போட்டி கிங்ஸ்டன் கிரிக்கெட் திடலில் நடைபெற்றது. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற ஆஸ்திரேலிய அணி கேப்டன் மிட்செல் மார்ஷ், மேற்கிந்தியத் தீவுகள் அணியை பேட்டிங் செய்ய அழைத்தார். நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 8 விக்கெட் இழப்புக்கு 172 ரன்கள் எடுத்தது.

ஆஸ்திரேலிய அணித் தரப்பில் ஸாம்பா 3 விக்கெட்டுகளும், நாதன் எல்லீஸ், மேக்ஸ்வெல் தலா 2 விக்கெட்டுகளும், துவார்ஷியஸ் ஒரு விக்கெட்டும் வீழ்த்தினர். பின்னர், 173 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய தொடக்க ஆட்டக்காரர்கள் மேக்ஸ்வெல் 12 ரன்களில் (ஒரு பவுண்டரி - ஒரு சிக்ஸர்) ஹோல்டரிடமும், கேப்டன் மிட்செல் மார்ஷ் 21 ரன்களில் (ஒரு பவுண்டரி - 2 சிக்ஸர்) அல்ஜாரி ஜோசப்பிடமும் வீழ்ந்தனர். இறுதியில் 15.2 ஓவர்களில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு ஆஸ்திரேலிய அணி, 173 ரன்கள் குவித்து அபார வெற்றி பெற்றது. இதன் மூலம், 5 போட்டிகள் கொண்ட டி20 தொடரில் ஆஸ்திரேலிய அணி 2-0 என்ற கணக்கில் முன்னிலை பெற்றுள்ளது.

# அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணியை யாராலும் உடைக்கவே முடியாது

### எடப்பாடி பழனிசாமி பேச்சு



**ஓரத்தநாடு. ஜூலை 24.**

அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணியை யாராலும் உடைக்கவே முடியாது என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி பேசினார்.

'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' எழுச்சிப்பயணம் மேற்கொள்ளும் அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான எடப்பாடி பழனிசாமி. நேற்று ஒரத்தநாடு, பேராவூரணி மற்றும் பட்டுக்கோட்டை ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் மக்களை சந்தித்தார். முதல் சந்திப்பாக ஒரத்தநாடு தொகுதிக்குட்பட்ட பேருந்து நிலையம் அருகே நடந்த கூட்டத்தில் அவர் பேசுகையில்., கூட்டணி பலம் இருக்கிறது என்று ஸ்டாலின் சொல்கிறார். 200 தொகுதிகள் வெல்லும் என்கிறார். ஸ்டாலின் அவர்களே ஒரத்தநாடு வந்து பாருங்க. பூமியே குலுங்கும் அளவுக்கு மக்கள் கூட்டம். நீங்கள் எப்படி வெல்வீர்கள்? அ.தி.மு.க. கூட்டணி 210 தொகுதிகளில் கண்டிப்பாக வெல்லும். விலைவாசி உயர்வு விண்ணை முட்டும் அளவு சென்றுவிட்டது. மக்கள் துடித்துக்கொண்டிருக்கிறார்கள். கட்டுமானப் பொருட்கள் விலையும் அபரிமிதமாக ஏறிவிட்டது. இனி மேல் யாரும் வீடுகட்ட முடியுமா? எடப்பாடி பழனிசாமி கூவிக்கூவி அழைக்கிறார், யாரும் வரவில்லை என்று துரைமுருகன் சொல்கிறார். துரைமுருகன் அவர்களே உங்களுடைய கூட்டணி எந்த நிலையில் உள்ளது என்பதை முதலில் பாருங்கள். ஒவ்வொருவரும் ஒவ்வொரு பக்கமும் இழுத்துக்கொண்டு இருக்கிறார்கள். எப்போது உடையும் என்றே தெரியவில்லை அதை முதலில் பாருங்கள்.

காவிரி பிரச்னையில் உச்சநீதிமன்ற தீர்ப்பு வந்தது, பா.ஜ.க.வோடு கூட்டணி வைத்திருந்தோம். ஆனாலும் 22 நாட்கள் அவையை ஒத்தி வைச்சோம். அது அ.தி.மு.க. திறமை, மக்கள் மீதான அக்கறை. 39 எம்பிக்களை வைத்து ஏன் குரல் கொடுக்கவில்லை..? ஏனென்றால் மக்கள் மீது அக்கறையில்லை. மக்கள் பிரச்னையை தீர்ப்பதில் எப்போதும் முதல் கட்சியாக அ.தி.மு.க. வே இருக்கிறது.

அ.தி.மு.க. பா.ஜ.க. கூட்டணியை பார்த்து திமுகவினருக்கு பயம் வந்துவிட்டது, ஏதாவது குழப்பம் ஏற்படுத்தி எங்கள் கூட்டணியை உடைக்கப் பார்க்கிறார்கள். அ.தி.மு.க. - பா.ஜ.க. கூட்டணியை யாராலும் உடைக்க முடியாது. வலிமையான வெற்றிக்கூட்டணி. அ.தி.மு.க. தனிப்பெரும்பான்மையுடன் ஆட்சி அமைக்கும் என்று பேசினார்.

### புதிய துணை ஜனாதிபதி தேர்வு:

# தேர்தல் பணியை துவங்கிய இந்திய தேர்தல் ஆணையம்

**புதுடெல்லி, ஜூலை 24-**

துணை ஜனாதிபதி தேர்தலுக்கான பணிகளைத் தொடங்கியதாக இந்திய தேர்தல் ஆணையம் புதன்கிழமை தெரிவித்துள்ளது. தேர்தலுக்கான அட்டவணை விரைவில் வெளியிடப்படும் என்றும் தெரிவித்துள்ளது.

துணை ஜனாதிபதி ஜகதீப் தன்கர், மருத்துவக் காரணங்களுக்காக அரசியலமைப்பின் பிரிவு 67(ஏ) -ன் படி, தனது பதவியை ராஜிநாமா செய்வதாக குடியரசு தலைவர் திரௌபதி முர்முவுக்கு திங்கள்கிழமை இரவு கடிதம் அனுப்பினார். இதனைத் தொடர்ந்து, ஜகதீப் தன்கரின் ராஜிநாமாவை ஏற்றுக்கொண்டு மத்திய உள்துறை அமைச்சகத்துக்கு குடியரசு தலைவர் அனுப்பியதாக மாநிலங்களவையில் செவ்வாய்க்கிழமை அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், புதிய துணை ஜனாதிபதியை தேர்ந்தெடுப்பதற்கான தேர்தலுக்கான பணிகளைத் தொடங்கியதாக இந்திய தேர்தல் ஆணையம் தரப்பில் புதன்கிழமை அதிகாரப்பூர்வமாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டிருக்கும் அறிவிப்பில் தெரிவித்திருப்பதாவது:

அரசியலமைப்பு பிரிவு 324 இன் கீழ், இந்திய துணை ஜனாதிபதி பதவிக்கான தேர்தலை நடத்துவதற்கு இந்திய தேர்தல் ஆணையம் அதிகாரம் பெற்றுள்ளது. அதன்படி, குடியரசு துணைத் தலைவருக்கான தேர்தல் தொடர்பான தயாரிப்புப் பணிகளை இந்திய தேர்தல் ஆணையம் தொடங்கியுள்ளது. அனைத்து ஏற்பாடுகளும் முடிவடைந்தவுடன் தேர்தலுக்கான அட்டவணை விரைவில் வெளியிடப்படும்.

தேர்தலில் வாக்களிக்க தகுதியுடைய மாநிலங்களவை மற்றும் மக்களவை உறுப்பினர்களின் பட்டியல் தயாரித்தல், தேர்தல் அதிகாரி மற்றும் உதவித் தேர்தல் அதிகாரிகளை இறுதி செய்தல் உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருகின்றன" எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜகதீப் தன்கரின் பதவிக் காலம் 2027 வரை இருக்கும் நிலையில், இரண்டு ஆண்டுகளுக்கு முன்னதாகவே ராஜினாமா செய்துள்ளார். இந்த நிலையில், புதிதாக தேர்வு செய்யப்படவுள்ள துணை ஜனாதிபதி, முழு பதவிக் காலமான 5 ஆண்டுகள் பதவியில் இருப்பார். அடுத்த சில நாள்களில் துணை ஜனாதிபதி தேர்தலுக்கான அட்டவணை வெளியிடப்பட்டு, அடுத்த மாத இறுதிக்குள் தேர்தல் முடிவடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# பொதுத்தேர்வு அட்டவணைகள் ஒருவாரத்தில் வெளியிடப்படும்

### அமைச்சர் அன்பில் மகேஷ் தகவல்

**திருச்சி, ஜூலை 24-**


பள்ளி பொதுத்தேர்வு கால அட்டவணைகள் இன்னும் ஒரு வாரத்தில் வெளியிடப்படும் பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் என்று அன்பில் மகேஷ் தெரிவித்துள்ளார்.

திருச்சியில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:- உங்களுடன் ஸ்டாலின் முகாம் அனைத்து இடங்களிலும் சிறப்பாக நடைபெற்று வருகிறது. முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நலமுடன் உள்ளார். இன்னும் 2 நாட்களில் அவர் வீடு திரும்புவார்.

ஓரணியில் தமிழ்நாடு திட்டம் மக்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. அதை பொறுத்துக் கொள்ள முடியாமல் தான் சிலர் நீதிமன்றம் சென்று உள்ளார்கள். எது எப்படி இருந்தாலும் நீதிமன்ற உத்தரவை பின்பற்றி நாங்கள் செயல்படுவோம். திட்டத்தின் பெயரை வைத்தும் சிலர் அரசியல் செய்து வருகிறார்கள். தமிழகத்தில் இந்த கல்வி ஆண்டுக்கான பள்ளி பொது தேர்வு கால அட்டவணைகள் இன்னும் ஒரு வாரத்தில் வெளியிடப்படும்.

எடப்பாடி பழனிச்சாமி தற்போது தேர்தல் பிரச்சாரத்தை தொடங்கி விட்டார். மக்கள் கூட்டத்திற்கு முன் ஏதாவது பேச வேண்டும் என பேசிக் கொண்டிருக்கிறார். ஆனால் அது எதுவும் எடுபடவில்லை. அவர் மற்ற கட்சிகளை கூட்டணிக்கு அழைக்கிறார். ஆனால் அவருடைய அழைப்பை அனைவரும் நிராகரித்து வருகிறார்கள். உதயநிதி ஸ்டாலின் தி.மு.க.வில் அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட இளம் தலைவராக இருக்கிறார். எங்கள் கட்சியில் நடக்கும் விவகாரங்கள் குறித்து எடப்பாடி பழனிச்சாமி கவலைப்பட தேவையில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

# உங்களுடன் ஸ்டாலின் முகாம்: பொதுமக்களிடம் மனுக்களை அமைச்சர் அர.சக்கரபாணி பெற்றார்




ஒட்டன்சத்திரம், ஜூலை 24-

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கீரனூர் பேரூராட்சியில் நடைபெற்றது.

உங்களுடன் ஸ்டாலின் முகாமில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கள் துறை அமைச்சர் அர. சக்கரபாணி பொதுமக்களிடம் மனுக்களை பெற்று கொண்டார்.

நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் சுப்பிரமணியன், பொன்ராஜ், பேரூர் செயலாளர் அன்பு (எ) காதர்பாட்ஷா, பொதுக்குழு உறுப்பினர் வெங்கிடுசாமி, பேரூராட்சி தலைவர் கருப்புசாமி, பேரூராட்சி துணைத் தலைவர் ஹாஜி அப்துல் சுக்கூர், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கிருஷ்ணசாமி உள்ளிட்ட நிர்வாகிகள், பொதுமக்கள், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## அருப்புக்கோட்டையில்
# உங்களுடன் ஸ்டாலின் முகாம்: அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் பங்கேற்பு




அருப்புக்கோட்டை, ஜூலை 24-

அருப்புக்கோட்டை மதுரை சாலையில் உள்ள சிஎஸ்ஐ சமுதாய கூடத்தில் வார்டு எண் 5 மற்றும் 6 ஆகிய பகுதிகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. இந்த முகாமை அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் துவக்கி வைத்தார்.

இந்த முகாமில் நகராட்சி நிர்வாகம், வருவாய்த்துறை, கூட்டுறவுத்துறை, வேளாண்மை துறை, தொழிலாளர் நலன் துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளின் கீழ் பொதுமக்களிடம் இருந்து மனுக்களை பெற தனித்தனி அரங்குகள் அமைக்கப்பட்டிருந்தது.

இந்த அரங்குகளை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர். ராமச்சந்திரன் பார்வையிட்டு இந்த முகாமில் பதிவு செய்த பயனாளிகளுக்கு உடனுக்குடன் இறப்பு சான்றிதழ், பட்டா பெயர் மாற்றம் போன்ற உதவிகளை வழங்கினார். இந்த முகாமில் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சுப்பாராஜ், முன்னாள் நகர மன்ற தலைவர் சிவப்பிரகாசம், நகராட்சி ஆணையாளர் ராஜமாணிக்கம் துணைத் தலைவர் பழனிச்சாமி, நகர கழக செயலாளர் ஏ.கே.மணி, நகர மன்ற உறுப்பினர் ட்விங்கிளின் ஞான பிரபா, மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளாட்சி தேர்தல் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# பரமக்குடி அரசு பள்ளி ஆசிரியரை கைது செய்யக்கோரி பா.ஜ.க. சார்பில் ஆர்ப்பாட்டம்



பரமக்குடி, ஜூலை 24-

பரமக்குடி எமனேஸ்வரத்தில் உள்ள அரசு பள்ளி ஆசிரியரை கைது செய்யக்கோரி பா.ஜ.க. சார்பில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட எமனேஸ்வரம் எஸ்.என்.வி அரசு மேல்நிலைப்பள்ளியில் ஆசிரியராக பணியாற்றி வரும் அருள் ராஜன் மாணவிகளிடம் பாடம் நடத்தும் போது பாலியல் ரீதியாக பேசி மன உளைச்சலை ஏற்படுத்தியதாக பள்ளியின் தலைமை ஆசிரியர் கொடுத்த புகாரின் அடிப்படையில் அவர் மீது போக்சோ வழக்கு பதியப்பட்டது. இந்நிலையில் இது வரையிலும் ஆசிரியர் மீது போக்சோ வழக்குப்பதிந்தும் கைது செய்யாததை கண்டித்து பரமக்குடி பாரதிய ஜனதா கட்சி நகரத் தலைவர் சுரேஷ்பாபு தலைமையில் பள்ளியின் முன்பு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இதில் மாவட்ட தலைவர் முரளிதரன், மாநில பொதுச் செயலாளர் பொன் பாலகணபதி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினர். மேலும் மாவட்ட பொதுச் செயலாளர் சண்முகநாதன்,மாவட்ட பொதுச் செயலாளர் குமார், மாநில முன்னாள் செயற்குழு உறுப்பினர் கதிரவன், முன்னாள் மாவட்ட துணைத் தலைவர் ராமசாமி,முன்னாள் மாவட்ட துணைத் தலைவர் பா. குமார், முன்னாள் மாநில செயற்குழு உறுப்பினர் சுந்தரராஜன்,முன்னாள் நகர்த் தலைவர் ரவி, முன்னாள் மாநில செயற்குழு உறுப்பினர் நாகராஜன்,மாநில பொதுக்குழு உறுப்பினர் இளங்கண்ணன் மற்றும் இந்து முன்னணி மாவட்ட பொதுச் செயலாளர் வீரபாண்டியன் ஆகியோர் பேசினர்.நகர் பொதுச் செயலாளர் பிரகாஷ் நன்றி கூறினார். ஆர்ப்பாட்டத்தில் பெற்றோர்கள், பொது மக்கள் மற்றும் பல்வேறு சமுதாய அமைப்பினர் கலந்து கொண்டனர்.

# பரமக்குடியில் புத்தகத் திருவிழா

பரமக்குடி, ஜூலை 24-

பரமக்குடி மக்கள் நூலகமும்,தமிழ்நாடு அறிவியல் இயக்கமும இணைந்து நடத்தும் மூன்றாவது ஆண்டு புத்தகத் திருவிழா பரமக்குடி ராஜாமகாலில் ஜூலை 25 முதல் ஆகஸ்ட் 3 வரை நடைபெறுகிறது.இதற்கான ஆலோசனைக் கூட்டம் நேற்று நடந்தது.இக்கூட்டத்திற்கு மக்கள்நூலக வரவேற்புக் குழுத் தலைவர் பெ.சேகர் தலைமையில் வகித்தார். செயலாளர் சி.பசுமலை முன்னிலை வகித்தார். நிகழ்ச்சிகள் குறித்து மக்கள்நூலகத் தலைவர் செ.சந்தியாகு, தமிழ்நாடு அறிவியல் இயக்கத்தலைவர் கே.பி.இராமமூர்த்தி, வரவேற்புக்குழு துணைச்செயலாளர் தி.ராஜா ஆகியோர் பேசினர்.


புத்தகத்திருவிழாவை முன்னிட்டு நாள்தோறும் சிறப்புப் பேச்சாளர்கள், இன்னிசை பட்டிமன்றம், எழுத்தாளர்களின் நூல் வெளியீட்டு விழா நடைபெற உள்ளது.நாள்தோறும்மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள்,பேச்சுப்போட்டி, கவிதைப்போட்டி,கட்டுரைப் போட்டிகள் நடைபெறுகிறது. மேலும் புத்தகங்கள் வாசிப்பு மற்றும் போதை ஒழிப்புக் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மினி மராத்தான் போட்டியும் நடைபெற உள்ளது.பத்து நாட்கள் நடைபெறும் புத்தகத் திருவிழாவை வரவேற்பு குழு ஏற்பாடுகளை செய்து வருகின்றனர்.



அருப்புக்கோட்டை மீனாட்சி சொக்கநாதர் திருக்கோவில் ஆடி மாத பிரதோஷத்தை முன்னிட்டு பிரதோஷ மூர்த்தி கோவிலை வலம் வந்து பொதுமக்களுக்கு அருள் பாலித்தார். நிகழ்ச்சி ஏற்பாடுகளை கோவில் செயல் அலுவலர் தேவி மற்றும் அறங்காவலர்கள் செய்திருந்தனர்.

# நத்தம் பகுதி சிவாலயங்களில் பிரதோஷ விழா கோலாகலம்






நத்தம், ஜூலை 24-

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் கோவில்பட்டி கைலாசநாதர் கோவிலில் ஆடி மாத பிரதோஷ விழா நடந்தது.இதையொட்டி நந்தி சிலைக்கு சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு 16 வகையான அபிஷேகங்களும், தீபாராதனைகளும் நடந்தது. தொடர்ந்து மேளதாளம் முழங்க சுவாமி புறப்பாடும் நடந்தது.பின்னர் மூலவர் செண்பகவல்லி சமேத கைலாசநாதருக்கு சிறப்பு அபிஷேகமும், அலங்காரமும், தீபாராதனைகளும் நடந்தது.இதில் சுற்றுவட்டாரங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் கோவிலுக்கு வந்திருந்து சுவாமி தரிசனம் செய்தனர். அவர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது.

இதைப்போலவே நத்தம் அருகே குட்டூரில் உள்ள உண்ணாமலை அம்பாள் உடனுறை அண்ணாமலையார் கோவிலிலும் பிரதோஷ விழா நடந்தது.இதில் மூலவருக்கும், நந்திக்கும் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு 16 வகையான அபிஷேகமும், தீபாராதனைகளும் நடந்தது.இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.தொடர்ந்து அவர்களுக்கு பிரசாதம் வழங்கப்பட்டது

## ஆடி மாத முதல் செவ்வாய்:
# நத்தம் மாரியம்மன் கோவிலில் பக்தர்கள் சாமி தரிசனம்



நத்தம், ஜூலை 24-

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் மாரியம்மன் கோவிலில் ஆடி மாத முதல் செவ்வாய்கிழமையை யொட்டி சிறப்பு பூஜைகள் நடந்தது. தொடர்ந்து மாரியம்மனுக்கு சிறப்பு அபிஷேகங்களும், அலங்காரம், தீபாராதனைகளும் நடந்தது.

பின்னர் கோவில் வளாகம் முழுவதும் வண்ண மலர்களால் அலங்கரிக்கபட்டு பூச்சொரிதல் விழா நடந்தது.இதில் அசோக்நகர், மீனாட்சிபுரம், தெலுங்கர் தெரு, கோவில்பட்டி, மாரியம்மன் கோவில் தெரு,கர்ணம் தெரு, செட்டியார்குளத்தெரு, காமராஜர் நகர் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் கையில் பூதட்டுகளுடன் ஊர்வலமாக கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்தனர். இதைப்போலவே நத்தம் பகுதியில் உள்ள அம்மன் கோவில்களிலும் ஆடி முதல் செவ்வாய் கிழமையை யொட்டி சிறப்பு பூஜைகள் நடந்தது. இங்கும் பக்தர்கள் கலந்து கொண்டு தரிசனம் செய்தனர்.

## வத்தலக்குண்டில் பா.ஜ.க. சார்பாக
# சுப்பிரமணிய சிவா நினைவு தினம் கடைப்பிடிப்பு




வத்தலக்குண்டு, ஜூலை 24-

திண்டுக்கல் மாவட்டம் வத்தலகுண்டில் சுதந்திர போராட்ட தியாகி சுப்பிரமணிய சிவா அவர்களின் 100வது நினைவு தினத்தை முன்னிட்டு வத்தலகுண்டு பஸ் நிலையம் முன்பாக மாவட்ட தலைவர் முத்துராமலிங்க ஜி தலைமையில் மலர் தூவி நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில் மாவட்ட பொருளாளர் எம் கருப்புசாமி வடக்கு ஒன்றிய தலைவர் கருணாநிதி தெற்கு ஒன்றிய அமைப்பாளர் ரமேஷ் குமார் வடக்கு ஒன்றிய பொதுச் செயலாளர் மதுரை வீரன் தெற்கு ஒன்றிய முன்னாள் பொதுச் செயலாளர் முத்துராமன் முன்னாள் மாவட்ட பொது செயலாளர் கோவிந்தராஜ் முன்னாள் மாவட்ட மகளிர் அணி வினோதினி எண்ணற்ற காவி சொந்தங்கள் கலந்து கொண்டு சுப்பிரமணிய சிவா அவர்களுக்கு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

# விபத்துகளில் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு உதவிதொகை: அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்




விருதுநகர், ஜூலை 24-

விருதுநகர் மாவட்ட கலெக்டர் அலுவலகக் கூட்டரங்கில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறையின் தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் சுகபுத்ரா தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் சீனிவாசன் சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில், பட்டாசுத் தொழிற்சாலைகளில் ஏற்பட்ட விபத்துகளில் பெற்றோரை இழந்த தொழிலாளர்களின் 38 குழந்தைகளுக்கு மாந்தோறும் ரூ.2000 வீதம் மொத்தம் ரூ.5.20 இலட்சம் மதிப்பிலான மாதாந்திர பராமரிப்பு உதவித்தொகைக்கான ஆணைகளை அமைச்சர் தங்கம் தென்னரசு வழங்கினார்.பின்னர் அமைச்சர் தெரிவித்ததாவது:-

பட்டாசுத் தொழிற்சாலை விபத்துக்களில் தாய், தந்தை இருவரில் எவரேனும் ஒருவர் மரணமடைந்த நிகழ்வில் பராமரிப்பு உதவித்தொகையாக (18 வயது பூர்த்தியாகும் வரை) மாதந்தோறும் ரூ.2000/-மும் மற்றும் தாய், தந்தை இருவரும் மரணமடைந்த நிகழ்வில் பராமரிப்பு உதவித்தொகையாக (18 வயது பூர்த்தியாகும் வரை) ரூ.4000/- மும் வழங்கப்படும். அதன்படி, விருதுநகர் மாவட்டத்தில், கடந்த பட்டாசு விபத்துக்களில் பெற்றோரை இழந்த தொழிலாளர்களின் 38 குழந்தைகளுக்கு நவம்பர் 2024 முதல் மே-2025 வரையிலான 7 மாதங்களுக்கான மாதாந்திர உதவித்தொகை ரூ.5.20 லட்சம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், அரசு கல்லூரிகள், அரசு உதவி பெறும் கல்லூரிகள் மற்றும் சுயநிதி கல்லூரிகளில் அரசு ஒதுக்கீட்டின் கீழ் பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையும் வழங்கப்படும். இது போன்று பட்டாசு தொழிற்சாலை விபத்துக்களில் உயிரிழக்கின்ற தொழிலாளர்களின் குழந்தைகளுடைய உயர் கல்வி வரையிலான கல்வி செலவுகளுக்கு தமிழ்நாடு அரசு என்றும் உறுதுணையாக இருக்கும் என அமைச்சர் தங்கம் தென்னரசு தெரிவித்தார். இந்நிகழ்வில், தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் இணை இயக்குநர்கள் ரவிச்சந்திரன், ராஜ்குமார், விருதுநகர் நகர்மன்ற தலைவர் மாதவன், பட்டாசு தொழிலாளர்களுடைய குழந்தைகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் இருந்தனர்.

# அலங்காநல்லூர் பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்
## வெங்கடேசன் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்



அலங்காநல்லூர், ஜூலை 24-

அலங்காநல்லூரில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமை வெங்கடேசன் எம். எல்.ஏ. தொடங்கி வைத்தார்.

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை சோழவந்தான் சட்டமன்ற உறுப்பினர் வெங்கடேசன் தொடங்கி வைத்தார்.

இதில் 1 முதல் 8 வார்டுகள் வரை உள்ள பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டனர். இந்த முகாமில் பட்டா மாற்றுதல், பென்சன், மகளிர் உரிமைத் தொகை, மருத்துவ காப்பீடு, ஆதார், உள்ளிட்ட பல்வேறு மனுக்களை அந்தந்த துறைச் சார்ந்த அரங்குகளில் உள்ள அலுவலர்கள் பொதுமக்களிடமிருந்து ம னுக்களை பெற்றனர்.

மேலும் பொதுமக்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தங்களது கோரிக்கை மனுக்களை சட்டமன்ற உறுப்பினரிடம் வழங்கினர்.

இந்த நிகழ்ச்சியில் வாடிப்பட்டி தாசில்தார் ராமச்சந்திரன், பேரூராட்சி உதவி இயக்குனர் மணிகண்டன், செயல் அலுவலர் சிவக்குமார், அவைத் தலைவர் பாலசுப்ரமணியன், ஒன்றிய செயலாளர்கள் தன்ராஜ், அருண்குமார், பேரூராட்சி தலைவர் ரேணுகா ஈஸ்வரி கோவிந்தராஜ், துணைத் தலைவர் சுவாமிநாதன்,பேரூர் செயலாளர்கள் இரகுபதி, மனோகரவேல் பாண்டியன், தொழில் நுட்ப அணி தவ சதீஷ், அனைத்து வார்டு கவுன்சிலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்..

# பரமக்குடி ஆயிர வைசிய சபை புதிய நிர்வாகிகள் பதவியேற்பு



பரமக்குடி, ஜூலை 24-

பரமக்குடி ஆயிர வைசிய சபை புதிய நிர்வாகிகள் பதவியேற்பு நேற்று நடந்தது.

ராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி ஆயிர வைசிய சபை தேர்தல் கடந்த 20 ஆம் தேதி நடைபெற்றது.

இதில் வெற்றி பெற்ற நிர்வாகிகள் பதவி ஏற்பு விழா சபை மகாலில் நடைபெற்றது.

சபை புதிய தலைவராக பாலுச்சாமி , இணைத்தலைவராக ராசி போஸ்,செயலாளராக லெனின் குமார்,பொருளாளராக சுப்பிரமணியன் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

தலைவர், இணைத்தலைவர் உறுதிமொழி ஏற்று பதவியேற்றனர். மேலும் ஆயிர வைசியமேல்நிலைப்பள்ளியின் செயலாளராக சதீஷ்குமார், ஆயிர வைசிய மெட்ரிக் பள்ளி செயலாளராக ராஜேஷ் கண்ணன்,பி.எட்., கல்லூரி செயலாளர் தட்சிணாமூர்த்தி , துவக்கப்பள்ளி செயலாளர் ராஜேஷ் குமார் மற்றும் 37 நிர்வாகிகளும் பதவியேற்றனர்.தேர்தல் அதிகாரியாக அம்பலம் ஜெயராமன் செயல்பட்டார்.

பதவியேற்ற புதிய நிர்வாகிகளுக்கு வாழ்த்துக்கள் தெரிவித்தனர்.

# நத்தம் அருகே வீட்டின் முன்பு நிறுத்தி வைக்கப்பட்ட பைக் திருட்டு

நத்தம், ஜூலை 24-

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே விளாம்பட்டியை சேர்ந்தவர் பொன்னர்(48). இவரது மகன் மணிகண்டன்(24). தனியார் பால் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறார். இவர் சம்பவத்தன்று இரவு வேலை முடிந்து வீட்டிற்கு சென்று விட்டு பைக்கை வீட்டின் வெளியே நிறுத்திவிட்டு சென்றார். பின்னர் மறுநாள் அதிகாலை வேலைக்கு செல்வதற்காக வந்து பார்த்த போது பைக்கை காணவில்லை. இது குறித்து மணிகண்டன் நத்தம் போலீசில் புகார் செய்தார்.அதன்பேரில் சப் - இன்ஸ்பெக்டர் தர்மர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.



சென்னை அப்பலோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வரும் முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று மருத்துவமனையிலிருந்து காணொலிக்காட்சி வாயிலாக "உங்களுடன் ஸ்டாலின்" திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து முகாம்களில் கலந்து கொண்ட பயனாளிகளிடம் கோரிக்கைகள் குறித்த விவரங்களை கேட்டறிந்தார்.



அரியலூர் மாவட்டத்தில் அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி கே.பழனிசாமி எழுச்சிப்பயணம் மேற்கொண்டிருந்தபோது உதவி கோரிய உத்திராணி பச்சைமுத்து என்ற பெண்மணிக்கு நேற்று மருத்துவ செலவுகளுக்கு தேவையான நிதி உதவியை வழங்கினார். உடன் அரியலூர் மாவட்ட செயலாளர் தாமரை உள்ளார்.

### அரசுமுறை பயணமாக

# பிரதமர் மோடி இங்கிலாந்து பயணம்

புதுடெல்லி, ஜூலை 24-

இங்கிலாந்து,, மாலத்தீவு ஆகிய 2 நாடுகளுக்கு நேற்று (ஜூலை 23) சுற்றுப் பயண மாக பிரதமர் மோடி புறப்பட் டார். அரசுமுறை பயணமாக, நேற்று (ஜூலை 23) பிரதமர் மோடி டெல்லியில் இருந்து இங்கிலாந்து புறப்பட்டு சென்றார். அந்நாட்டு பிரதமர் கெய்ர் ஸ்டார்மருடன் பல் வேறு பிரச்சினைகள் குறித்து விரிவான பேச்சுவார்த்தை நடத்துகிறார். பிரதமர் மோடி முதலில், 23 மற்றும் 24-ம் தேதிகளில் இங்கிலாந்து செல்கிறார். அவர் இங்கி லாந்து செல்வது, இது 4-வது தடவை ஆகும்.

அப்போது இருதரப்பு உற வுகள் மட்டுமின்றி, பிராந்திய, சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள் குறித் தும் இருவரும் பேசுகிறார் கள். வர்த்தகம், பொருளாதா ரம், தொழில்நுட்பம், புத்தாக் கம், பாதுகாப்பு, பருவநிலை, சுகாதாரம், கல்வி, மக்களிடை யிலான உறவுகள் ஆகியவை பற்றியும் விவாதிக்கிறார்கள்.

இந்த பயணத்தின் முக்கிய அம்சமாக, இந்தியா-இங்கி லாந்து தடையற்ற வர்த்தக ஒப் பந்தம் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இரு நாடுகளும் 3 ஆண்டுக ளாக பேச்சுவார்த்தை நடத்திய தன் இறுதியில், ஒப்பந்தத்தில் கையெழுத்திடுகின்றன.

பின்னர், இங்கிலாந்தில் சுற்றுப்பயணத்தை வெற்றிக் கரமாக முடித்து விட்டு அங் கிருந்து 25-ம் தேதி பிரதமர் மோடி மாலத்தீவு செல்கிறார். அவர் அங்கு செல்வது, இது 3-வது தடவை ஆகும். மாலத் தீவு அதிபராக முகமது முய்சு கடந்த 2023-ம் ஆண்டு நவம் பர் மாதம் பதவியேற்ற பிறகு இந்திய தலைவர் ஒருவர் செல்வது இதுவே முதல் முறை ஆகும். 26-ம் தேதி நடக்கும் மாலத்தீவின் 60-வது சுதந்திர தின கொண்டாட்டத் தில் சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார்.



சென்னை திரு.வி.க.நகர் மண்டலம் வார்டு-74 மங்களபுரம் கிருஷ்ணதாஸ் பிரதான சாலையில் உள்ள சென்னை தொடக்கப்பள்ளியில் நேற்று நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை பார்வையிட்டு முகாமில் பங்கேற்ற கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டசத்து பெட்டகங்களை இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு வழங்கினார். இதில் மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர் தாயகம் கவி, மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌசிக் மற்றும் சரிதா மகேஷ்குமார், ஆர்.சரவணன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அரியலூர், கங்கைகொண்ட சோழபுரத்தில்

# மாமன்னர் ராஜேந்திர சோழனின் முப்பெரும் விழா தொடங்கியது

ஜெயங்கொண்டம்,ஜூலை24-

தமிழ்நாடு அரசு சார்பில் கங்கைகொண்ட சோழபுரத் தில் மாமன்னர் ராஜேந்திர சோழனின் முப்பெரும் விழா தொடங்கியது. இதில் அமைச் சர்கள் சிவசங்கர், தங்கம் தென்னரசு, மு.பெ.சாமிநாதன் உள்ளிட்டோரம் பங்கேற்ற னர்.

அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் அருகே அமைந்துள்ள, மாமன்னர் ராஜேந்திர சோழனால் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கட்டப் பட்ட கங்கை கொண்ட சோழ புரம் பிரகதீஸ்வரர் கோவில், யுனெஸ்கோ உலக பாரம்பரிய சின்னமாக அறிவிக்கப்பட்டுள் ளது.

மாமன்னர் ராஜேந்திர சோழனின் பிறந்தநாளை அரசு விழாவாகக் கொண்டாட பல் வேறு தரப்பினரும் விடுத்த

## தமிழக அமைச்சர்கள் பங்கேற்பு



கோரிக்கையை ஏற்று, தமிழ் நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் தலைமையிலான அரசு கடந்த 2021-ம் ஆண்டு முதல் அவரின் பிறந்தநாளை ஆடி மாத திருவாதிரை விழாவாக வெகு விமரிசையாகக் கொண் டாடி வருகிறது.

இந்த ஆண்டு ஆடி திரு வாதிரை விழா நேற்று கோலாகலமாகத் தொடங்கி யது. இந்த விழா, மாமன்னர் ராஜேந்திர சோழனின் பிறந்த நாள் விழா, கங்கைகொண்ட சோழபுரம் கோவிலை அவர் கட்டத் தொடங்கிய ஆயிரமா வது ஆண்டு விழா மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகள் மீது படையெடுத்துச் சென்ற ஆயிரமாவது ஆண்டு நிறைவு விழா என முப்பெரும் விழா வாகக் கொண்டாடப்படுகி றது. விழாவையொட்டி அரி யலூர் மாவட்டத்திற்கு நேற்று உள்ளூர் விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

விழாவை முன்னிட்டு நேற்று காலை பிரகதீஸ்வர ருக்கு சிறப்பு அபிஷேக, ஆரா தனைகள் நடைபெற்றன. பின்னர் யாழிசை நிகழ்ச்சி நடைபெற்றது. அதனை தொடர்ந்து நாட்டிய நாடகம், கிராமிய இசை மற்றும் நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றன. மதியம் "சோழர்கள் புகழுக்கு பெரிதும் காரணம் நிர்வாகத் திறனே! போர் வெற்றிகளே!" என்ற தலைப்பில் பட்டிமன் றம் நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து பல்சுவை நிகழ்ச் சிகள், நையாண்டி மேளம், கர காட்டம், காவடியாட்டம், மக் களிசைப் பாடல்கள் நடை பெற்றன. மாலையில் ராஜேந் திரசோழன் நாடகம், மயில் காவடி, கிராமியப் பாடல்கள் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதில் அமைச்சர்கள் சிவசங் கர், தங்கம் தென்னரசு, மு.பெ. சாமிநாதன் உள்ளிட்டோரம் பங்கேற்றனர்.



சென்னை சர்தார்பட்டேல் சாலையில் நிலவும் போக்குவரத்து நெரிசலை குறைக்கும் நோக்கில் சர்தார்பட்டேல் சாலையையும்-ராஜீவ்காந்தி சாலையையும் இணைக்கும் வகையில் மத்திய கைலாஷ் சந்திப்பில் அமைக்கப்பட்டு வரும் "எல்" வடிவ மேம்பால பணிகளை நேற்று பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு களஆய்வு மேற்கொண்டார்.

# 3 மாவட்ட கலெக்டர்களுடன்... (1-ம் பக்க தொடர்ச்சி)

திட்டப் பணிகளின் முன் னேற்றம் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று காணொலி வாயிலாக கன்னி யாகுமரி மாவட்ட கலெக்டர் ஆர்.அழகு மீனா, காஞ்சிபுரம் கலெக்டர் கலைச்செல்வி மோகன், கோயம்புத்தூர் மாவட்ட கலெக்டர் பவன்கு மார் ஜி. கிரியப்பனவர் ஆகி யோருடன் ஆய்வு மேற் கொண்டார்.

இந்த ஆய்வின்போது, முதல்வர் மு.க. ஸ்டாலின் "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களில் மக்களிடமி ருந்து பெறப்படும் மனுக்கள் மீது உரிய நடவடிக்கைகளை உடனடியாக எடுக்க வேண் டும் என்றும், முகாம்களுக்கு மனுக்களை அளிக்க வரும் மக்களுக்குத் தேவையான வச திகள் செய்து தரப்பட வேண் டும் என்றும் அறிவுறுத்திய தோடு, இதுவரை அம்மாவட் டங்களில் நடத்தப்பட்ட முகாம்களின் எண்ணிக்கை, பெறப்பட்ட மனுக்களின் விவரங்கள் போன்றவை குறித்து மாவட்ட கலெக்டர்க ளிடம் கேட்டறிந்தார்.

அத்துடன் "உங்களுடன் ஸ்டாலின்" முகாமில் மனுக் கள் அளிக்க வருகை தந்த பய னாளிகளிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக கலந்துரையாடி, அவர்களது கோரிக்கைகளின் விவரங்கள் குறித்து கேட்ட றிந்து, அவற்றின் மீது உடன டியாக நடவடிக்கை எடுத்திட அலுவலர்களுக்கு உத்தரவிட் டார். "உங்களுடன் ஸ்டா லின்" முகாமில் கலந்து கொண்டு பயனடைந்த பய னாளிகள் முதல்வர் மு.க.ஸ் டாலினுக்கு நன்றி தெரிவித் துக் கொண்டனர்.

மேலும், அரசு தலைமைச் செயலாளர் முருகானந்தமி டம் பல்வேறு துறை சார்ந்த திட்டங்கள் குறித்து முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை மேற்கொண்டார். பல்வேறு கோப்புகளை பார்வையிட்டு ஒப்புதல் அளித்தார். இந்நிகழ் வின் போது, அரசு உயர் அலு வலர்கள் உடனிருந்தனர்.

இவ்வாறு அதில் கூறப் பட்டுள்ளது.




மதுரை மாநகர் மாவட்ட தெற்கு 3-ம் பகுதி 88-வது வட்ட அ.தி.மு.க. சார்பில் கிழக்கு வட்ட செயலாளர் ஆ.மார்க்ஸின் டிமிட்ரோ தலைமையிலும், பகுதி செயலாளர் கறிக்கடை முத்துகிருஷ்ணன் முன்னிலையிலும் அனுப்பானடி பேருந்து நிலையம் அருகில் நடைபெற்ற தெருமுனை பிரச்சாரக்கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. பேசினார். இதில் நிர்வாகிகள் வில்லாபுரம் ராஜா, எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பா.குமார், பேராசிரியர் ஜெயபால், வி.பி.ஆர்.செல்வகுமார், கவுன்சிலர் பிரேமா டிமிட்ரோ, ஓட்டுரணி திருமுருகன், கே.கலைச்செல்வம், ஜோசப்தனிஸ்லாஸ், காதர்அம்மாள், ஜி.மணிகண்டன், ஏ.சுந்தர், எம்.ஜி.ஆர்.நாகராஜன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



சென்னை தலைமைச்செயலகத்தில் வேளாண்மை, உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் தலைமையில் தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் திட்டங்கள் மற்றும் ஆராய்ச்சிகள் தொடர்பான ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இதில் வேளாண் உற்பத்தி ஆணையர் வ.தட்சிணாமூர்த்தி, வேளாண்மை இயக்குநர் பி.முருகேஷ், சர்க்கரைத்துறை இயக்குநர் த.அன்பழகன், பதிவாளர் சு.தமிழ்வேந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர்.